திருவாசகச் செல்வர், வாதவூரரின் பாதசேகரன்,திருமுறைச் செல்வர்,
இறைபணி வேந்தன்,ஈழத்துச்சிவதொண்டன், பெரியபுராண மாமனிதர்,
திருவாசக கலாநிதி, கலாபூஷணம், இறைபணிச்செம்மல்

## வை.செ.தேவராசா. ச.நீ

(தலைவர் இந்துமாமன்றம், மணிவாசகர் சபை - வவுனியா)

அவர்களின்

# தேவ அமுதம்



## அமுதவிழா நினைவு மலர்

## 22.07.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு
பேராசிரியர் இரா. சிவசந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருவாசகச் செல்வர், வாதவூரரின் பாதசேகரன், திருமுறைச் செல்வர்,
இறைபணி வேந்தன், ஈழத்துச்சிவதொண்டன், பெரியபுராண மாமனிதர்,
திருவாசக கலாநிதி, கலாபூஷணம், இறைபணிச்செம்மல்

## வை.செ.தேவராசா (ச.நீ)

(தலைவர் இந்துமாமன்றம், மணிவாசகர் சபை - வவுனியா)
அவர்களின்

# அமுதவிழா நினைவு மலர்

# தேவ அமுதம்

மலராசிரியர்
**கலாநிதி தமிழ்மணி அகளங்கன்**

**22.07.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம் :

நூலின் பெயர் : தேவ அமுதம்
(இறைபணிச் செம்மல் வை.செ.தேவராசா அவர்களின்
அமுதவிழா மலர்.)

மலர் ஆசிரியர் : கலாநிதி தமிழ்மணி அகளங்கன்.
தமிழ் அதர்,
90, திருநாவற்குளம்,
வவுனியா.

வெளியீடு : அமுதவிழாக் குழு

உரிமை : திரு.வை.செ.தேவராசா
இல.59, வைரவர்கோவில் வீதி,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.
தொ.பே : 024 2222455

முதற்பதிப்பு : 22. 07-2017

அச்சுப் பதிப்பு : வாணி கணணிப் பதிப்பகம்
இல. 85, கந்தசுவாமி கோவில் வீதி,
வவுனியா.
தொ.பே : 024 2223658
024 2227216

விலை : அன்பளிப்பு (இலவசம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# நுழைவாயிலில்...

இறைபணிச் செம்மல் வை.செ.தேவராசா அவர்களது அமுதவிழா மலரான தேவ அமுதம் மலரின் ஆசிரியராக உங்களை வரவேற்கின்றேன்.

இறைபணிச் செம்மல் அவர்களது ஐநூறு திருவாசக முற்றோதல்களின் பூர்த்தியை முன்னிட்டு வவுனியா மணிவாசகர் சபை 03-11-2007 இல் கோவில்குளம் காஞ்சி சிவமடத்தில் நடாத்திய பெருவிழாவின் நினைவாக வெளியிடப்பட்ட திருவாசகத்தேன் என்ற மலருக்கும் மலராசிரியராக இருந்து பணியாற்றியதை நினைவு கூருகிறேன்.

இறைபணிச் செம்மல் அவர்கள் ஆயிரத்தி ஐந்நூறுக்கும் மேற்பட்ட திருவாசக முற்றோதல்களை இலங்கையிலும் வெளிநாடுகளிலுமாகச் செய்து முடித்திருக்கிறார். பன்னிரு திருமுறைகளை பல ஆலயங்களில் முற்றோதல் செய்து முடித்திருக்கிறார். பலரை இத்துறையில் ஈடுபடுத்தியிருக்கிறார்.

வவுனியா மாவட்டத்தின் சகல வளர்ச்சிப் பணிகளிலும் பங்கெடுத்திருக்கிறார். காசி, கைலாயம் என புனித யாத்திரைகளைச் செய்து முடித்துள்ளார். இவரைப் பற்றி இந்நூலில் பலர் பல தகவல்களை வழங்கியுள்ளார்கள். அவற்றை உங்கள் பார்வைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

இம்மலரை குறுகிய காலத்தில் தயாரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எல்லோரையும் சிரமப்படுத்திவிட்டது. ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், வாழ்த்துப்பா. முதலானவற்றின் மூலம் இம்மலரை அலங்கரித்த அனைத்துப் பெரியோர்களுக்கும் எனது நன்றி.

மண்ணுக்காக, மக்களுக்காக, மொழிக்காக, சமயத்துக்காக, தம் வாழ்நாட்களை அர்ப்பணித்தவர்களை கௌரவிப்பதும், பாராட்டுவதும், நினைவுகூர்வதும் எமது கட்டாயக் கடமையாகும்.

அந்தவகையில் இந்த மண்ணில் மட்டுமல்ல எந்த மண்ணிலும் பாராட்டத்தக்க பெருந்தகையாக விழாவுக்குரிய நாயகனாகத் திகழும் இறைபணிச் செம்மல் அவர்களைப் பாராட்டுவோம். நினைவுகூர்வோம். உற்சாகப்படுத்துவோம், நன்றி செலுத்துவோம் இன்னும் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துவோம்.

**அகளங்கன்**
மலர் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

திருவாசகம்,

பன்னிரு திருமுறைகள்

ஆகியவற்றை

முறைப்படி முற்றோதல் செய்து வரும்

அடியவர்களுக்கு

இந்நூல்

சமர்ப்பணம்.

இறைபணிச்செம்மல்

**வை.செ.தேவராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நுழைவாயிலில்... | 3 |
| 2. | சமர்ப்பணம் | 4 |
| 3. | வாழ்க்கைக்குறிப்பு | 7 |
| 4. | குடும்ப விபரம் | 10 |
| 5. | கடந்த 55 வருடங்களில் | 12 |
| ஆசிச்செய்திகள் | | |
| 6. | வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் | 17 |
| 7. | சிவஸ்ரீ முத்துஜெயந்திநாதக் குருக்கள் | 18 |
| 8. | சிவஸ்ரீ இ.பாலசந்திரக் குருக்கள் | 19 |
| 9. | சிவஸ்ரீ மு.க.கந்தசாமிக் குருக்கள் | 20 |
| 10. | சிவஸ்ரீ நா.பிரபாகரக் குருக்கள் | 21 |
| 11. | சிவஸ்ரீ இ.கமலேஸ்வரக் குருக்கள் | 22 |
| 12. | சிவஸ்ரீ க.சிவராசக் குருக்கள் | 24 |
| வாழ்த்துரைகள் | | |
| 13. | கௌரவ ந.சிவசக்தி ஆனந்தன் | 25 |
| 14. | திரு.மு.சிற்றம்பலம் | 26 |
| 15. | கலாகீர்த்தி உடுவை எஸ்.தில்லைநடராசா | 28 |
| 16. | பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்பரன் | 30 |
| 17. | திரு.கா.உதயராசா | 31 |
| 18. | திரு.கு.சிதம்பரநாதன் | 32 |
| 19. | திரு.இரத்தினம் நித்தியானந்தன் | 33 |
| 20. | திரு.சி.ஏ.இராமஸ்வாமி (ஈசன்) - வாழ்த்துப்பா | 35 |
| 21. | பண்டிதர் வீ.பிரதீபன் - வாழ்த்துப்பா | 38 |
| 22. | திரு.க.சுவர்ணராஜா | 39 |
| 23. | திரு.நா.சேனாதிராசா | 41 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 24. | கலாபூஷணம் க.ஐயம்பிள்ளை | 42 |
| 25. | சிவபூஜாதுரந்தரர் ஆ.நவரட்ணராசா | 44 |
| 26. | செல்வி கு.ஜெயராணி (சாமி அம்மா) | 45 |
| 27. | திரு.க.ந.பாலச்சந்திரன் | 46 |
| 28. | திரு.இ.கிருபாமூர்த்தி | 47 |
| 29. | திரு.பொன்னையா நல்லையா | 48 |
| 30. | திரு.கனகசபை கந்தசாமி | 50 |
| 31. | திரு.இராசா விஜேந்திரநாதன் | 51 |
| 32. | புலவர் அ.திருநாவுக்கரசு | 52 |
| 33. | தமிழருவி த.சிவகுமாரன் | 54 |
| 34. | லயன் T.K.இராஜலிங்கம் | 55 |
| 35. | திரு.ஆ.இராஜேந்திரன் | 58 |
| 36. | ஸ்தபதி சு.சண்முகவடிவேல் | 59 |
| 37. | திரு.கணபதிப்பிள்ளை நவரட்ணம் | 60 |
| 38. | பண்டிதை யோகலட்சுமி சோமசுந்தரம் | 61 |
| 39. | திரு.வினாசித்தம்பி முத்துராசா | 63 |
| 40. | லயன் கு.கங்கைவேணியன் | 64 |
| 41. | திரு.தா.அமிர்தலிங்கம் | 66 |
| 42. | திருமதி.பா.கமலேஸ்வரி | 67 |
| 43. | திரு.எஸ்.வஸ்தியாம்பிள்ளை | 68 |
| 44. | திரு.வீ.ஜெகசோதிநாதன் | 69 |
| 45. | திரு.வை.சு.தனபாலசிங்கம் | 71 |
| 46. | தமிழ்மணி அகளங்கன் | 73 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கலாபூஷணம், இறைபணிச் செம்மல் வை.செ.தேவராசா (ச.நீ) அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

**பிறப்பு**

வடக்கின் புகழ் பெற்ற மாவட்டமான யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊர்காவற்துறையிலுள்ள வேலணை மேற்கில் சிற்பனை என்னும் கிராமத்தில் வைத்தியலிங்கம் செல்லத்துரை பராசக்தி தம்பதிகளின் புதல்வராக **20.07.1938** இல் திரு.தேவராசா பிறந்தார். இரண்டு சகோதரிகள், ஒரு சகோதரர் இவருக்கு உடன் பிறந்தோர்.

**கல்வி**

தனது ஆரம்பக் கல்வியை வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் பின் 6 முதல் S.S.C வரை வேலணை மத்திய கல்லூரியிலும் (ஆங்கிலப்பாடசாலை) கல்வி கற்றார்.

**வவுனியாவில்**

1952 இல் கொழும்புக்குச் சென்று வர்த்தக நிறுவனங்களில் வேலை செய்து விட்டு 1960 ஜீன் மாதம் வவுனியாவிற்கு வந்தார்.வவுனியாவில் பஜார் வீதியில் P.H.N சில்வாவுடைய பேப்பர்க் கடையை எடுத்து நடாத்தி பின் அதை **கண்ணகி** புத்தகசாலை என்ற பெயரில் புத்தகக் கடையாக மாற்றி 1969 வரை நடாத்தினார்.

வவுனியாவில் பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட இவர் தமிழரசுக் கட்சியின் அபிமானியாகி வவுனியாவிலே வாழ்ந்த தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களுடன் நட்பாகி அரசியல், சமூக, சமய சேவையாற்றத் தொடங்கினார்.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர், செயலாளர், உபதலைவர், உபசெயலாளர் என பல பதவி வகித்து சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவினார்.

30.5.1962ல் கரம்பன் மேற்கு ஊர்காவற்துறையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை நீலாட்சி தம்பதிகளின் மகள் **பாலம்பிகை**யை திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் திருமணஞ் செய்து கொண்டார். 10 பிள்ளைகளின் தந்தையானார் 18 பேரப்பிள்ளைகள் ஒரு பூட்டப்பிள்ளை கண்டார். இவரது மகன் **அமலன்** இப்போது சுத்தானந்த இந்து இளைஞர் சங்கச் செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வவுனியா நகரிலுள்ள ஸ்ரீ கந்தசுவாமி கோவிலைப் பொதுக் கோவிலாக்கப் பாடுபட்டு வெற்றிகண்டு, செயலாளராகப் பணியாற்றியவர். ஆலயத்திற்கு ஒரு தர்மகர்த்தா சபையை அமைப்பித்து நல்லவகையில் இயங்க வழிகாட்டியவர்.

வவுனியா இந்துமா மன்றம் செயலற்றுப் போயிருந்த காலத்தில் அதனைப் புதுப்பித்துச் செயலாளராகவும், பின் தலைவராகவும் பணியாற்றியவர். தற்போது தலைவராக உள்ளார்.

மணிவாசகர் சபையை உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றிவருகிறார்.

**இவர் வகித்த பதவிகள்.**

1. வவுனியா வேப்பங்குளம் விநாயகர் ஆலய முதல்ச் செயலாளர்.
2. வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் அபிவிருத்திச்சபை செயலாளர் (1972)
3. வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை செயலாளர் (1988 - 1995)
4. வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க நிர்வாகசபை உறுப்பினர்.
5. வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க உபதலைவர்
6. வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க உபசெயலாளர்
7. வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க செயலாளர்
8. வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கட்டிடக்குழு, சமயக்குழு, நிதிசேகரிப்புக்குழு உறுப்பினர்.
9. வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க தலைவர் (1992-1994)
10. வவுனியா இந்துமா மன்றச் செயலாளர்
11. வவுனியா இந்துமா மன்ற போஷகர்.
12. வ/குடியிருப்பு விநாயகர் ஆலய நிர்வாகசபை உறுப்பினர்.
13. வ/ஆதிவிநாயகர் ஆலய போஷகர்
14. வ/ஆதிவிநாயகர் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்
15. அகில இலங்கை இந்துமாமன்ற நிர்வாகசபை உறுப்பினர்
16. காந்தீயத்தின் மேல்மட்ட உறுப்பினர்
17. வவுனியா இந்து வர்த்தகர் சங்க செயலாளர் (1964 - 1970)
18. வவுனியா வர்த்தகர் சங்கச் செயலாளர்.
19. வவுனியா வர்த்தகர் சங்க உறுப்பினர்.
20. வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலய உபசெயலாளர்
21. வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலய நிர்வாகசபை உறுப்பினர்.
22. அகில இலங்கை சமாதான நீதவான் சங்க உபசெயலாளர்
23. காந்தீயத்தால் நடாத்தப்பட்ட 400க்கும் மேலான சிறுவர் பாடசாலை அமைப்புக்குழு உறுப்பினர் (அதற்குத் தேவையான தளபாடங்களை இலவசமாக வழங்கியவர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வகிக்கும் பதவிகள்**

1. வவுனியா இந்துமாமன்றத் தலைவர்
2. கோவில்குளம் சிவாலய பரிபாலனசபை உப செயலாளர்
3. திருக்கேதீச்சர ஆலய உபதலைவர்.
4. மணிவாசகர்சபைத் தலைவர்
5. வஸ்டெக் கணனி நிறுவன செயலாளர்
6. தமிழ்நாடு கந்தகோட்டம் அடியார் திருக்கூட்ட உறுப்பினர்

**பட்டங்கள் கௌரவங்கள்**

1. இறைபணிச்செம்மல் - 1994, (இந்து கலாசார அமைச்சு)
2. திருவாசகச் செல்வர் - 1996, (யாழ் அறநெறிய சைவ முன்னேற்றச் சங்கம்)
3. வாதவூரரின் பாதசேகரன் - 2001, (திருச்சி திரு ஆனைக்கா ஆலயம்)
4. ஈழத்து சிவதொண்டன் - 2006, (தமிழ்நாடு குன்றத்தூர்)
5. பெரியபுராணம் மாமனிதர் - 2005, (சேக்கிழார் விழா கொழும்பு, இந்து கலாசார அமைச்சு)
6. கலாபூஷணம் - 2013, (கலாசார அமைச்சு)
7. இறைபணிவேந்தன் - (வ/புளியடி விநாயகர் ஆலயம்)
8. திருமுறைச் செல்வர் - (திருக்கேதீச்சரம் ஆலயம்)
9. திருவாசக கலாநிதி - (மன்னார் மாவட்ட மணிவாசகர் சபை)

ஆயிரத்தி ஐந்நூறுக்கும் மேற்பட்ட திருவாசக முற்றோதல்களை இலங்கையிலும் வெளி நாடுகளிலும் நடாத்தியவர் 500 முற்றோதல்களின் நிறைவை "திருவாசகத்தேன்" என்ற மலர் வெளியிட்டு விழா வாக்கியவர். திருவாசகப் புத்தகங்களை அச்சிட்டு இலவசமாக வழங்கி ஊக்குவித்தவர். காசி கங்கை மட்டுமன்றி திருக்கைலாய யாத்திரையும் செய்து முடித்தவர். வவுனியா கோவில்குளம் சிவன் கோவிலிலும், திருக்கேதீஸ்வரம் கோவிலிலும் பல தடவைகள் பன்னிரு திருமுறை முற்றோதல் செய்தவர்.

வவுனியாவின் சமூக, சைவசமய வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்பைச் செய்தவர். கல்வி, கலை இலக்கிய வளர்ச்சிக்கு பொருளுதவி செய்தவர்.

எமது மண்ணைத் தன் அயராத பல திருத்தொண்டுகளால் முன்னேற்ற நிலைக்குக் கொண்டுவர உழைத்த இறைபணிச் செம்மல் கலாபூஷணம் வை.செ. தேவராசா அவர்களுக்கு இவ்வாண்டு 22.07.2017 இல் **அமுதவிழா** நடைபெறுவது சாலப்பொருத்தமானது.

இவர் இன்னும் பல்லாண்டு ஆரோக்கியத்தோடு வாழ்ந்து இந்த மண்ணைச் சிறப்பாக்க இறைவனை வேண்டுகின்றேன்.

**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இறைபணிச் செம்மல் வை.செ. தேவராசா அவர்களின் குடும்ப விபரம்

**வை.செ. தேவராசா J.P.** (வேலணை மேற்கு - பிறப்பு)
(இல.59, வைரவர்கோவில் வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.)

| | |
|---|---|
| துணைவியார். | அமரர்.திருமதி.பாலாம்பிகை தேவராசா<br>(கரம்பன் மேற்கு , ஊர்காவற்துறை) |
| தகப்பனார். | வைத்தியலிங்கம் செல்லத்துரை<br>(வேலணை -மேற்கு, வேலணை) |
| தாயார். | செல்லத்துரை பராசக்தி<br>(சிற்பனை,வேலணை மேற்கு. வேலணை) |
| சகோதரர். | செல்லத்துரை சபாரெத்தினம் (அமரர்)<br>(பட்டகாடு, வவுனியா) |
| சகோதரிகள். | திருமதி.வேலாயுதம் கோமேதகவல்லி (அமரர்)<br>திருமதி.விஸ்வநாதன் திலகவதி<br>(கொழும்பு) |

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

01. திருமதி. மலர் விழி + சூரியப்பிரகாசன் (கொழும்பு)
தமிழ் நாடு, சென்னை
   1. தமிழினி சூரியப்பிரகாசன் + கார்த்தி - சுயன் (பூட்டன்)
   2. இலக்கியா சூரியப்பிரகாசன்

02. தேவராசா அசோகன் + நந்தினி (வேலணை மேற்கு)
நங்கை நல்லூர், சென்னை
   1. காவியா
   2. அகல்யா

03. தமிழ்செல்வி + சத்தியரூபன் (காரைநகர்)
ஓஸ்லோ, நோர்வே
   1. ரஜித்தா
   2. பிருந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. தயாநிதி + செல்வநாதன் (வேலணை மேற்கு)
லண்டன்
1. மயூரன்
2. மதுரன்

05. கலைவதனி + கண்ணன் (அமரர்) - நயினாதீவு
லண்டன்
1. கோகுலன்
2. அபிராமி

06. திரு.தேவராசா அகிலன் + ஜெயஸ்ரீ
பிரான்ஸ்

07. திரு.தேவராசா அமலன் + பிரபா (நயினாதீவு)
வவுனியா
1. தனுஷ்கா
2. யதுர்ஷிகா

08. திருமதி.தமிழரசி + தர்மானந் (வவுனியா)
வைரவபுளியங்குளம், வவுனியா
1. காயத்திரி
2. ஹரணி

09. திருமதி.அன்பரசி + குகேந்திரன்
லண்டன்
1. கஜன்
2. கரன்

10. திருமதி.கலையரசி + சகாயரூபன்
வைரவபுளியங்குளம், வவுனியா
1. ராகுலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கடந்த 55 வருடங்களில் என் வாழ்க்கைப் பாதையில்...

## குடியிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

வவுனியாவில் நடந்த சத்தியாக்கிரக நிகழ்வில் கலந்து கொண்டது எனது முதல் நடவடிக்கையாக உள்ளது. சில வருடங்களில் வவுனியா குடியிருப்பு விநாயகர் ஆலய கும்பாபிஷேக விழாவில் கலந்து பொருளாதார ரீதியிலும் சரீர தொண்டுகள் மூலமும் கோவில் நிர்வாகத்தில் உறுப்பினராக சேர்ந்து ஆலயத்தில் தற்போது உள்ள வசந்த மண்டபத்தை எனது செலவில் கட்டியது மட்டுமல்லாமல் கும்பாபிஷேக செலவிலும் கலந்து கொண்டது ஆலய நிர்வாக உறுப்பினராக இருந்து மடப்பள்ளி, வாகனசாலை போன்றவற்றையும் கட்டி வழங்கியது.

## வவுனியா இந்து மாமன்றம்

1. வவுனியா இந்துமாமன்றம் பறி போகாமல் வவுனியா கந்தசுவாமி கோவில் குருக்கள், நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் அறங்காவலர் திரு.ஆ.தியாகராசா, சர்வோதய அமைப்பாளர் திரு.மாதவன், திரு.இ.கிருபாமூர்த்தி ஆகியவர்களுடைய உதவியுடன் 16 அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட ஒரு கட்டிடத்தை அமைத்து பாதுகாத்து திரு.C.A.இராமஸ்வாமி அவர்களை தலைவராகவும் திரு. கிருபாமூர்த்தியை செயலாளராகவும் தெரிவு செய்து நடாத்தியது.

2. திரு.ந.செல்லையா அவர்கள் (மாமடு செல்லையா) சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் ஆரம்ப உறுப்பினர். நல்ல சைவ அபிமானி. திறமைசாலி. அவர் இந்து இளைஞர் சங்கத்தில் இருந்து இந்து மாமன்றத்தை உருவாக்கினார். G.T.Z காணியில் அவர் முதலில் இந்து மா மன்றத்தை நடாத்தி வரும் போதுதான் பூங்காவீதியில் உள்ள காணியை அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொண்டார். பின்னர் அவர் வவுனியாவை விட்டுச் சென்றதன் காரணமாக புதிய பொதுச்சபை உறுப்பினர்களைச் சேர்த்து சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் எனது தலைமையில் பொதுக் கூட்டம் நடாத்தி திரு.சி.ஏ.இராமஸ்வாமி அவர்களை தலைவராகவும், திரு.இ.கிருபாமூர்த்தி அவர்களை செயலாளராகவும், திரு.சபாபதி அவர்களை பொருளாளராகவும் தெரிவு செய்து மண்டபம் அமைத்து காணியைக் காப்பாற்றினோம்.

## சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்

1) வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க காணி பல துண்டுகளாக பராமரிக்காமல் இருந்த போது அப்போதைய அரசாங்க அதிபர் திரு.B.C.பெரேரா அவர்களினால் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்க முற்பட்டபோது உடன் திரு. V.T. சுப்ரமணியம் திரு.ச.சுப்பிரமணியம் (சேர்மன்) திரு.R.V.வில்வராசா, திரு.மு.காசிப்பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கா.லோகசிங்கம் BA, கோவில்குளம் திரு.த.நல்லதம்பி இவர்கள் மூலம் உடனடியாக எனது சொந்த செலவில் 30 அடி நீளமும் 16 அடி அகலமும் கொண்ட தற்காலிக கொட்டில் அமைத்தல், இந்தோனேசியாவில் இருந்து அகழ்வராய்ச்சியில் எடுத்த மரத்திலான பஞ்சமுக பிள்ளையாரை வைத்து காணியை காப்பாற்றியது.

2) அதன்பின் பலரின் உதவியோடும் நீர்ப்பாசன இணை பொறியியலாளர் திரு.எஸ். ஆறுமுகம் ஐயாவின் திறமையால் கட்டிடம் கட்டி திறப்பு விழா நடந்தது. அக்கட்டிடம் நிறைவு பெறாமல் இருந்த போது திரு.V.T.சுப்ரமணியம் அவருடைய உதவியில் தேக்குமரம் கொண்டு வந்து எனது "ஸ்ரீ முருகன் மரக்காலையில் அரிந்து கட்டிடத்துக்கான கதவுகள், ஜன்னல்கள், தளபாடங்கள் செய்து (எதுவித ஊதியமும் பெறாது) பூட்டிக் கொடுத்ததை நினைவு கூருகின்றேன்.

3) கிழக்குப் பக்கமாகவும், தெற்குப் பக்கமாகவும் சங்கத்துக்குத் தேவையான காணியை திரு.S. நாகராசா CO, எமது சங்க பொருளாளர் அவர்களின் உதவியோடு பெற்றுக்கொடுத்தது. இதன் பின் கச்சேரி சேவையர், காணி அதிகாரி, A.D.P போன்றவர்களுடன் பேசி அவர்கள் பாதங்களில் தொட்டு வணங்கி அக்காணியை (கிணறு வெட்டியிருக்கும் காணி ) சங்கத்துக்குச் சேர்ந்த்தமை. எனக்கு உதவியாக இருந்தவர்கள் அப்போதைய பொருளாளர் திரு.ஞா.பற்குணம் அவர்கள், திரு. பாலசுப்ரமணியம் (அதிபர் CCTMS)

4) சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமும் அரசாங்க கலாச்சார திணைக்களமும் சேர்ந்து நடாத்திய திருமுறை விழா, திருமுறை ஊர்வலம் - திருக்கேதீச்சரம் ஆலயத்தின் பழைய தேரை எனது செலவில் ஏற்றி வவுனியா கொண்டு வந்து குடியிருப்பு விநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக கடை வீதி வழியாக இந்து இளைஞர் சங்கத்துக்கு எடுத்து வந்து பெரிய விழா எடுப்பதற்கு மூல காரணமாக இருந்த **திரு.த.நல்லதம்பி** அண்ணன் அவர்கள் V.T **சுப்ரமணியம்** அண்ணன் பாராளுமன்ற உறுப்பினர் **திரு.தா. சிவசிதம்பரம்** அவர்களோடு நானும் எனது தொழிற்சாலை ஊழியர்கள் 20 பேரும் பெரும் பங்கு வகித்து விழாவை சிறப்பித்ததை நினைவு கூருகின்றேன்.

5) சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் ஸ்தாபிக்கப்பட்ட நடராஜர் சிலையை **திரு.செ.மார்க்கண்டேயர்** அவர்கள் தனது செலவில் செய்து தந்த போது அதை யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா கொண்டு வந்து விழா செலவை எனது செலவில் செய்து திறப்புவிழா செய்ததை நினைவுகூருகின்றேன்.

6) சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்துக்கு முன்பக்க சுற்றுமதிலை எனது செலவில் கட்டி கொடுத்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபம் அரைவாசி கட்டிடம் பூர்த்தியாகாமல் இருந்த போது திரு. இராஜசுந்தரம் அவர்கள் காந்தீயம் அமைப்பாளராகவும் நான் மத்திய சபை உறுப்பினராகவும் இருந்தபோது ஜேர்மன் G.T.Z நிறுவன பொறுப்பாளர் "மொனிக்கா" அவர்களின் உதவியோடு ரூபா 75000/= அன்றைய நிதி பெற்று வேலைகள் தொடங்கிய போது கூரை வேலைகள் யாவையும் எனது (ஸ்ரீமுருகன் மரக்காலை) கண்ணகி மரக்காலை ஊழியர்கள் மூலம் ஒரு சதமும் கூலி வாங்காமல் செய்து திறப்புவிழா செய்தது. எனது கண் முன் நிற்கிறது.

### வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

வவுனியா மகாவித்தியாலயக் காணியை சூசைப்பிள்ளையார்குள குடியேற்றவாசிகள் மேலும் பிடிக்காமல் திரு.ஞா. சொக்கலிங்கம், திரு. ஞா.பத்மநாதன், நான், திரு. ஐயாத்துரை புறக்டர் எல்லோரும் சென்று சூசைப்பிள்ளையார்குள மக்களிடம் வேண்டிக் கொண்டதன் பின், மீண்டும் பிடிபடாமல் 5 ஏக்கர் காணி(இன்று இருக்கிறது)யை பாடசாலைக்கு காப்பாற்றிக் கொடுத்தது.

### அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துக்கு வழங்கப்பட்ட காணியை இலங்கை வங்கி மாவட்ட கிளைக்கு வழங்க அரச அதிபர் முயற்சித்த போது எனது சொந்த செலவில் கச்சேரியில் வேலை செய்த எழுதுவினைஞர் சங்க உறுப்பினரும் எனது சக மாணவனுமாகிய கிருஷ்ணபிள்ளையுடன் உடனடியாக எனது சொந்த செலவில் கம்பிக்கட்டை போட்டு கம்பி அடித்து கேட்போட்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துக்கு ஒதுக்கப்பட்டது என ஒரு பெயர்ப்பலகையும் போட்டு அன்று காணியை பாதுகாத்து கொடுத்தது.

### வவுனியா கந்தசுவாமி கோவில்

வவுனியா கந்தசுவாமி கோவிலுக்கு பொதுச்சபையை உருவாக்கி கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை என்ற பெயரில் நிர்வாகத்தை ஏற்படுத்தி பல வருடங்கள் செயலாளராக இருந்து நடாத்தியது.

### வைரவபுளியங்குளம் வைரவர் ஆலயம்

வைரவபுளியங்குளம் வைரவர் ஆலயத்துக்கு **திரு.R.வில்வராசா திரு.பொ.நடராசா** VCO அவர்களையும் பொதுமக்களையும் சேர்த்து நிர்வாக சபையை ஏற்படுத்தி தலைவராக R.வில்வராசா அவர்களையும் நான் செயலாளராகவும் இருந்து இந்துக் கோவிலாகக் கட்டி கும்பாபிஷேகம் செய்யும் தருணத்தில் அதன் செயலாளராக நானும் பொருளாளராக திரு. வசந்தன் அவர்களும் இருந்து சிறப்பாக நிர்வாகசபையை அமைத்தது.

### சிறுவர் பூங்கா

வைரவபுளியங்குளம் சிறுவர் பூங்கா காணியை அரசியல் ரீதியாக எடுத்து வேறு தேவைக்கு திருமதி.இராஜமனோகரி புலேந்திரன் எடுக்க முற்பட்ட போது இலங்கை வங்கி நகரகிளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனேஜராக இருந்த திரு. றோய் அவர்களும் நானும் பெரும் பிரயத்தனம் செய்து காணியை காப்பாற்றியது.

### விளையாட்டுக்கழகம்

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வைரவபுளியங்குளம் இளைஞர்கள் மூலம் திரு. தே.அமலன் தலைமையில் கட்டிடம் கட்டிய போது நகரசபைச் செயலாளர் தடுத்த போது நான் மிகவும் தாழ்மையாக வேண்டிக் கொண்ட போது அது கைவிடப்பட்டு, எனது உதவியோடும் பலரது உதவியோடும் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் உருவாகியது.

### ஆதி விநாயகர் ஆலயம்

ஆதி விநாயகர் ஆலயம் ஆரம்பித்த போது திரு.சண்முகநாதன் அவர்களுக்கு ஆலோசனையும் உதவியும் செய்து முதல் சிறிதாக ஆலயம் அமைக்க உதவியது. எனது மனைவியின் ஞாபகார்த்தமாக **பாலாம்பிகை மண்டபம்** அமைத்துக் கொடுத்தது.

### வேப்பங்குளம் விநாயகர் ஆலயம்

மன்னார் வீதி 6ம் ஒழுங்கையில் உள்ள வேப்பங்குளம் விநாயகர் ஆலயம் ஒரு பாலை மரத்தடியில் தபால் கந்தோர் நடராசா அண்ணன் அவர்களின் பாரியார் அவர்களால் பராமரிக்கப்பட்ட போது அதற்கான நிர்வாக சபையில் செயலாளராக இருந்து கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்ய உதவியது.

### சிந்தாமணி விநாயகர் கோவில்

சிந்தாமணி விநாயகர் கோவில் அப்போதைய அரச ஊழியர்கள் ஆரம்பித்த போது முதல் கட்டிடம் சிறியதாக கட்டி வழங்கியது. 20 வருடங்கள் வரை நான் உறுப்பினராக இருந்து உதவியது.

### தாண்டிக்குளம் முருகன் கோவில்

தாண்டிக்குளம் முருகன் கோவில் நான் வவுனியா வரும் போது கட்டிடம் கட்டி குறையாக பல காலம் இருந்தது.அன்று தாண்டிக்குளம் மு.சபாரத்தினம் (V.C.O நடராசா அவர்களின் தமையனார்) அக்கோயிலை புனருத்தாபனம் செய்த போது அவருக்கு பல உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி கும்பாபிஷேகம் செய்ய உதவியது.

### கோவில்குளம் சிவன் கோவில்

கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயம் ஆரம்பித்த போது திரு.ஆ.நவரத்தினராசா அவர்கள், திரு.சண்முகம் அவர்களோடு என்னாலான உதவிகள் செய்து அப்போது உருவாக்கப்பட்ட நிர்வாக சபையில் உபசெயலாளராக இருந்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருக்கேதீச்சரம்

திருக்கேதீச்சரம் ஆதினம் திருப்பணி வேலைகளுக்காக எனது லொறியின் மூலம் பல லோட் கற்கள் 3/4" X 11/2" கூலி வாங்காமல் கொண்டு சென்று வழங்கியது.

### சாஸ்திரிகூழாங்குளம் சிவன் கோவில்

சாஸ்திரிகூழாங்குளம் (சிவபுரம்) சிவனாலயம் ஆரம்பிக்கப்பட்ட போது உயர்திரு. செ.பத்மநாதன் அவர்களின் தலைமையில் கோயில் புணருத்தாபனம் செய்யப்பட்ட போது எனது பரிபூரண ஒத்துழைப்பையும் பொருளாதார உதவிகளையும் செய்து கும்பாபிஷேகம் செய்ய உதவினேன்.

### சிறுவர் பாடசாலை

வவுனியாவில் முதல் 10 சிறுவர் பாடசாலைகளை ஆரம்பித்து பலருடைய உதவிகளோடு கிராமங்களில் பாடசாலைகள் நடாத்தினோம். இந்துமா மன்ற உதவியுடன் பாடசாலைகள் நடைபெற்றன. உதாரணம் : சாஸ்திரிகூழாங்குளம், புதுக்குளம், செட்டிகுளம், மாங்குளம் (செட்டிகுளம்), பாவற்குளம் முதலாம் யுனிற், ஓமந்தை முதலான இடங்கள் முக்கியமானவை.

### குட்செட் அம்மன் கோவில்

குட்செட் அம்மன் கோவில் முதன் முதலாக வவுனியாவில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டது. இதை அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் தம்பி இராஜா குகனேஸ்வரன் தனது பாராளுமன்ற நிதியுடன் ஆரம்பித்த போது நான் 28 றக்டர் லோட் மணல் கொடுத்து உதவியது.

இப்படி பல தொண்டுகளை செய்தமை குறிப்பிடத்தக்கது.


**வை.செ.தேவராசா**
இல.59, வைரவர்கோவில் வீதி,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து ஆலய ஒன்றியத்தின்
ஓர் அங்கமான
மன்னார் மாவட்ட மணிவாசக சபையினர்





*வவுனியா இந்துமாமன்ற தலைவர் இறைபணிச்செம்மல்*

அருள்திரு **வை.செ.தேவராசா** அவர்களின்

1500வது

திருவாசக முற்றோதலை முன்னிட்டு

**திருவாசக கலாநிதி**

எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

08.01.2017

தேசகீர்த்தி **பிரம்மஸ்ரீ மனோ.ஐங்கரசர்மா**
(அகில இலங்கை சமாதான நீதவான்)
**தலைவர்** (மன்னார் மணிவாசக சபை)

வைத்திய கலாநிதி **மு.கதிர்காமநாதன்**
**செயலாளர்** (மன்னார் மணிவாசக சபை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்...



65 வது பிறந்தநாளில் மனைவி, மகள் தமிழரசியுடன்...



மனைவி, பேர்த்திகளுடன்...



பூட்டனுடன்...



சகோதரி திலகவதி விஸ்வநாதன் மற்றும் மருமக்களுடன் லண்டனில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நினைவலைகள்...



லண்டனில், மகள் தயாநிதி, திருமதி அருணகிரிநாதன், மகள் தமிழ்ச்செல்வி



லண்டனில் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன்....



லண்டன் நாகபூஷணி அம்மன் கோயிலில்....






சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு.நா.சேனாதிராசா, அரசாங்க அதிபர் திரு.சி.சண்முகம், கலாபூஷணம் அமரர்.பொன்.தெய்வேந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்...





லண்டனில்...




500 திருவாசக முற்றோதல்கள் பூர்த்தி விழாவின் போது...



இந்துமா மன்ற அடிக்கல் நாட்டும் வைபவம் நல்லை ஆதீனம் அவர்களோடு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்...




சாமஸ்ரீ விருது பெற்ற போது...



மன்னாரில் திருவாசக கலாநிதி பட்டம் பெற்றபோது...



இந்துமா மன்ற பாலர் பாடசாலை விழாவின் போது...



வவுனியா ஆதிவிநாயகர் ஆலயத்தில் தனது மனைவியின் நினைவாக அமைத்துக் கொடுக்கப்பட்ட அமரர் பலாம்பிகை மண்டப திறப்பு விழாவின் போது வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன், கிளிநொச்சி மாவட்ட நீதிபதி திரு.சிவகுமார் ஆகியோருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்...




சுத்தானந்த இந்து இளைஞர் சங்க செயலாளர்
அமரர் க.தர்மதேவன் அவர்கள் பொன்னாடை போர்த்துகிறார்.



சிவஸ்ரீ இ.வைத்தியநாதக்குருக்கள் பொன்னாடை
போர்த்துகிறார்.



திருக்கேதீச்சரத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி விழாவும்
பொன்னாடைக் கௌரவமும்...



திருக்கேதீச்சரத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி விழா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்...



மணிவாசகர் சபை பரிசளிப்பு விழாவில்...



இரண்டு தலைமுறைக் கலைஞர்களுடன்...




வவுனியா மாவட்ட கலை இலக்கிய விழா 2010



நூல் வெளியீட்டு விழாவில் நிதியுதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்...





தந்தை செல்வா ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டியின் போது...



மனைவி அமரர் பாலாம்பிகை நினைவு உயர்கல்வி நிதியுதவியின் போது...
முன்னாள் நகரசபைத் தலைவர் அமரர் ச.சுப்பிரமணியம்,
வ.சுத்.இந்.இளை.சங்க தலைவர் திரு.நா.சேனாதிராசா ஆகியோருடன்...





மணிவாசகர் சபை – திருவாசக முற்றோதலின் போது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம்

வெளிவட்ட வீதி, வவுனியா.



# ஆசிச் செய்தி

## அமுதவிழா

**வ**வுனியா மண்ணின் திருவாசகச் செல்வர் வை.செ.தேவராசா ஐயா அவர்களின் 80வது அகவையை ஒட்டி சமூகம் சார்ந்தவர்களினால் அமுதவிழா கொண்டாடப்படுவதை யொட்டி மகிழ்வடைகின்றோம்.

வவுனியா மண் மட்டுமல்லாமல் உலகெலாம் திருவாசகத்தை ஓதுவாரை, கொடையாளியை, அன்புள்ளம் கொண்ட பண்பாளனை பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு நோய்நொடி இல்லாமல் வாழ்ந்து இறைபணியாற்ற இறைவன் பாதம் பணிந்து, ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுபம்


**சிவஸ்ரீ நா.பிரபாகரக்குருக்கள்**
கௌரவ செயலாளர்

**சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள்**
கௌரவ தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கற்புலத்து மனோன்மணி அம்பாள் துணை
வேதாகமகிரியா கலாநிதி, வேதாகம கிரியா சிரோமணி, சிவாகம கிரியா தத்துவநிதி,
சிவாச்சார்ய சிரோமணி



## சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள் J.P

பிரதமகுரு, ஸ்ரீ கருமாரி நாகபூஷணி அம்பாள் ஆலயம் - இறம்பைக்குளம்
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் - தோணிக்கல்
தலைவர் - வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம்
போஷகர் - மணிவாசகர் சபை, தமிழ்ச் சங்கம்.
அவர்களின்

# ஆசியுரை

வவுனியாவில் சைவத்திற்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றி வரும் **"திருவாசகச் செல்வர்", "இறைபணிச்செம்மல்"** உயர்திரு.செல்லத்துரை தேவராசா அவர்களுக்கு 80 வயது ஆரம்பமாகி உள்ளது. இவர் **பாலாம்பிகை**யைத் திருமணம் முடித்து அறம், பொருள், இன்பம், என்ற மூன்று விதமான பயன்களையும் பெற்று வாழ்கிறார் என்றால் மிகையாகாது. 10 மக்கள் 18 பேரப்பிள்ளைகள் ஒரு பூட்டப்பிள்ளை என்று ஆலமரம் போல் விழுது விட்டு வாழ்ந்து வரும் பெரியார் தன் வாழ்வின் மூச்சாக **திருவாசக முற்றோதலை** 1500க்கு மேற்பட்ட தடவைகள் செய்து ஒரு சைவ உலக சாதனையாளராகத் திகழ்கிறார்.

வவுனியா நகரத்தில் இவரது இனிமையான குரலில் பஞ்சபுராணம் ஓதாத ஆலயங்களே இல்லை எனலாம். இவருக்கும் எனக்கும் 20 வருட தோழமை உண்டு. என்னைக் கொண்டு தனது ஒரு மகளுக்கு திருமணம் செய்து வைத்தது இன்னும் பசுமையாக என் நெஞ்சில் உள்ளது. நான் செய்த அனேக கும்பாபிஷேகங்களில் திருக்கதவம் திறக்க **"பண்ணினேர் மொழி"** பாடி சிறப்பித்தமையும் மறக்கமுடியாது. அன்னாரின் 80 வயது விழா சிறக்கவும் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து திருவாசக முற்றோதலை தொடர்ந்து செய்யவும் வாழ்த்துவதோடு, விழா ஞாபகார்த்தமாக ஓர் மலர் வெளிவருவதும் பொருத்தமான செயலே என பாராட்டுகிறேன்.

தந்தை, மாமா, பாட்டன், பூட்டன் இவ்வளவு உறவுக்கும் சொந்தக்காரர் ஒருவருக்கு விழா எடுப்பது என்பது பாராட்டத்தக்க செயல் எனக்கூறி இவர் இன்னும் பல்லாண்டு காலம் பொருளோடு புகழோடு உடல் நலத்தோடு வாழ எனது குலதெய்வம் மனோண்மணி அம்பாளின் பாதம் பணிவதோடு கருமாரி நாகபூசணி அம்பாளை தினமும் அர்ச்சிக்கின்றேன்.


"வாழ்க வளமுடன்
தோன்றிற் புகழோடு தோன்றுக
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பிரம்மஸ்ரீ இ.பாலசந்திர குருக்கள்

இல. 01, கற்குழி, வவுனியா
அவர்களின்

# ஆசியுரை

## தேவ வாழ்க்கை வாழ்பவர்

தனக்காக வாழ்வது மிருக வாழ்க்கை. தனக்கும் பிறருக்குமாக வாழ்பவன் மனிதன். பிறருக்காகவே வாழ்பவர் தேவர் என்பர். நாம் தேவ வாழ்க்கை வாழாவிட்டாலும் மனித வாழ்க்கையாவது வாழ வேண்டும். இதற்கு சில பண்புகள் உண்டு. அன்பு, அடக்கம், பரந்த மனப்பான்மை, தரும சிந்தனை, தியாகம், இறைபக்தி, சமூகப்பணி, சமயத்தொண்டு மிக அவசியம்.

இவற்றை சாதிக்க போதிய உடல்நலம், ஓரளவு பொருளுடைமை இருப்பது அவசியம். இதற்கு துர்ப்பழக்கம் இல்லாமை மிக முக்கியம். நல்லொழுக்கம் மிக அவசியம். இந்தவகையில் அன்பர் தேவராசா அவர்கள் இதற்கு ஓர் உதாரணம் எனலாம். இவரின் வாழ்க்கை மற்றவர்கட்கு படிப்பினையாக இருக்கும்.

வயது எண்பது, முத்தி பழுத்த பழம். வசதி இருந்தாலும் இந்த வயதிலும் இறைபணி செய்வது மட்டுமல்லாமல் இமயம் தொட்டு காசிவரை தீர்த்தமாடி சீமைக்கும் சென்று வந்துள்ளார். எமக்கும் காசி தீர்த்தம் கிடைக்கப்பெற்றது எமது பாக்கியம். இவரின் சேவை இன்னும் மக்களுக்குத் தேவை. இவர் சிரஞ்சீவியாக இருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.


சுபம்

**பிரம்மஸ்ரீ இ.பாலசந்திரக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை



வ/குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு

**சிவஸ்ரீ.மு.க.கந்தசாமி குருக்கள்**

(கைரேகை சோதிட வல்லுநர், சோதிட கலாநிதி, கலாபூஷணம்,
அகில இலங்கை சமாதான நீதவான்)

அவர்களின்

# ஆசிச் செய்தி

## திருவாசகச் செல்வர் தேவராசா

**வ**வுனியா நகரில் சைவசமய வளர்ச்சியில் பெரும் ஈடுபாடு கொண்ட **இறைபணிச் செம்மல், திருவாசக தொண்டர்** என்ற பெயர் கொண்ட **கண்ணகி தேவராசா** அவர்களின் அகவை 80 வயது ஆரம்பமாவதையிட்டு அவரை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன்.

திருவாசக முற்றோதல் வவுனியா நகரில் உள்ள ஆலயங்களிலும் இலங்கையின் பல பாகங்களிலும் செய்தும் செய்வித்தும் கலந்து கொண்டும் இதுவரை (1500) ஆயிரத்தி ஐந்நூறு முறைகளுக்கு மேல் பூர்த்தி செய்துள்ளார் என்பதை நான் அறிவேன்.

மன்னார் மாவட்ட ஆலயங்கள், சைவ நிறுவனங்கள் எல்லாம் சேர்ந்து **திருவாசக கலாநிதி** என்ற பட்டம் வழங்கியுள்ளன.

திரு. தேவராசா அவர்கள் ஆலயத் தொண்டுகளில் எமது ஆலயத்திலும் மற்றும் பல ஆலயங்களிலும் செய்த தொண்டுகளை நான் நன்கு அறிவேன். அவருடைய சமய சமூக சேவை என்றும் வவுனியா வாழ் மக்களுக்குத் தேவை என்று கூறி, அவர் பல்லாண்டு காலம் வாழ சித்தி விநாயகர் பாதம் தொழுது ஆசிகூறுகிறேன்.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகெலாம்.

**சிவஸ்ரீ மு.க.கந்தசாமி குருக்கள்**
பிரதமகுரு
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
குடியிருப்பு.
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சிவஸ்ரீ நா.பிரபாகரக் குருக்கள்

வவுனியா

அவர்களின்

# ஆசிச் செய்தி

"திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்"

என்பது மொழிவாக்கு

திருவாசகத்தின் சொல் அழகும் பொருள் அழகும் ஆழமானவை
அற்புதமானவை
அத் திருவாசகத் தேன்மூலம் அடியவர்களை இறைவன்பால்
இட்டுச் செல்பவர்
இல்லற ஞானி.
இவரது மூச்சு திருவாசகம்.
இதற்கு இவரது குரல்வளம் மெருகூட்டியது.
ஓதும் தன்மையினால் அனைவரையும் தன்பால் ஈர்ப்பவர்.
பொருள் மிளிரும் திருவாசகப் பற்றினால் மீண்டும் மீண்டும் தேன் பருகி
1500 முறைக்குமேல் முற்றோதல் கண்டவர்.
உலகமறிந்த பெருமகனார்.
நெற்றியில் நிறைந்த விபூதி,
கழுத்தினில் உருத்திராட்ச மாலை,
உதட்டிலே புன்முறுவல்,
**"திருவாசகச் செல்வர்" "இறைபணிச் செம்மல்"**
வை.செ.தேவராசா எனும் அற்புத மனிதர்.
வர்த்தகராக, கொடையாளியாக, சேவகனாக, சமூகத்தின்
வழிகாட்டியாய் என பல பரிமாணமாய் வாழ்கின்றவர்.
வாதவூரரின் பாதசேகரனுக்கு 80 வயது தொடக்கம்.
வவுனியூர் சமூகம் "அமுத விழா" எடுகின்றது.

விழா சிறப்புற மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.
இன்னும்பல முற்றோதல் காண அமுத விழா நாயகனுக்கு
இறைவன் துணை புரியட்டுமாக!

விழா எடுப்போர்க்கு நன்றிகள் பல உரித்தாகுக!


நன்றி

**சிவஸ்ரீ நா.பிரபாகரக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



**சிவஸ்ரீ.இ.கமலேஸ்வரக்குருக்கள்**
பிரதமகுரு
அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர்
திருக்கோவில், வவுனியா.
அவர்களின்

## ஆசியுரை

## பன்னிரு திருமுறை முற்றோதல் செய்பவர்

23.07.2017 அன்று 80வது அகவையில் பிரவேசிக்கும் இறைபணிச்செம்மல் வை.செ.தேவராசா அவர்கள் 100வது அகவை வரை நீடூழி வாழ எல்லாம் வல்ல அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப் பெருமானை வணங்கி, யாழ்ப்பாணம் சப்த தீவுகளில் ஒன்றான வேலணையில் பிறந்த நல்ல ஒழுக்கமுடைய மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்து நல் மக்களைப் பெற்றெடுத்து வவுனியாவில் பல ஆண்டுகாலமாக வர்த்தகப் பெருமகனாய் மிளிர்ந்தது மட்டுமல்லாமல் வவுனியாவில் பல ஆலயங்களின் பரிபாலன சபையில் அங்கம் வகித்தவர்.

அது மட்டுமல்லாமல் தேவாரத்திருமுறைகளை உரிய பண்ணோடும் சொல் உச்சரிப்போடும் பாடுவதில் கைதேர்ந்தவர். வவுனியாவில் இந்து மாமன்றம் போன்ற சைவ மன்றங்களிலே தலைமைப் பதவி வகித்ததோடு மட்டுமல்லாமல் இன்று வவுனியாவிலே உள்ள ஆலயங்களிலே திருவாசகத்தை முற்றோதல் செய்வதற்கு வழிசமைத்தவர் என்கின்ற பெருமைக்குரியவர்.

திருக்கேதீஸ்வரம் திருக்கோவில் மற்றும் வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்திலும் வருடம் தோறும் பன்னிரு திருமுறைகளை முற்றோதல் செய்து வருகின்ற காரியம் போற்றுதற்குரியது. சிவனை முழுமுதற் தெய்வமாகக் கொண்ட சைவத்தையே போற்றி வணங்குகின்றவர். இந்தியாவில் பல ஆலயங்களிலும் திருவாசகத்தை முற்றோதல் செய்ததோடு 1500க்கு மேற்பட்ட தடவை திருவாசகத்தை முற்றோதல் செய்திருக்கின்றார்.

எந்த ஆலயத்திற்குச் சென்றாலும் அங்கே சரியைத் தொண்டு செய்யாமல் ஒரு நாளும் இருந்ததில்லை. அப்படிப்பட்ட பெருமனிதருக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு பார்பதி பரமேஸ்வரன் உறையும் திருக்கைலாய மலைத் தரிசனம். அவர் செய்த சிவகைங்கரியமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட பல பெருமைகளுக்குரிய வை.செ.தேவராசா அவர்கள் 1000 பிறை கண்ட மாமனிதராக வாழ்வது இந்த ஊருக்கே பெருமை சேர்க்கிறது. **இறைபணிச்செம்மல்** என்றாலே **தேவராசா** என்பதை உலகிற்கு காட்டியவர்.

எல்லோரையும் அன்பினாலே ஈர்த்து எல்லோரோடும் இனிமையாகப் பேசும் ஆற்றல் மிக்கவர். முன்னொரு காலத்தில் **"கண்ணகி"** தேவராசா என அழைக்கப்பட்டவர் இப்போது எல்லாம் **"இறைபணிச் செம்மல்"** என்கின்ற பெயரோடு வாழ்ந்து வரும் அளவுக்கு இறைபணியே தன் பணியாக வாழ்கின்றார்.

வை.செ.தேவராசா அவர்கள் நீண்ட ஆயுளோடும் ஆரோக்கியத்தோடும் வாழ்ந்து இன்னும் பல இறைபணிகளைச் செய்ய எல்லாம் வல்ல அகிலாண்டேஸ்வரப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றோம்.

**சிவஸ்ரீ. இ.கமலேஸ்வரக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"



சிவபூஜா துரந்தரர், சைவக்குருமாமணி, சிவாகம கிரியா தத்துவநிதி
தர்ப்புருஷதேசிக
**சிவஸ்ரீ க.சிவராசக்குருக்கள்**
வவுனியா
அவர்களின்

# ஆசியுரை

## தெய்வீக திருவாசகப் பணியில் சிறப்பு கண்ட இறைபணிச் செம்மல்

ஏவிளம்பி வருஷம் தமது எண்பதாவது அகவையில் எம்பெருமான் திருவருளால் சைவசமய பணியாற்றிட கால் பதிக்கும் திரு.வை.செ.தேவராசா J.P அவர்கள் வவுனியா மாவட்டத்தில் மட்டுமல்லாது பல வெளி ஊர்களிலும் தமது தெய்வீகக்குரல் மூலமாக திருமுறைகள் பல பல கண்டு இன்புற்ற பெருந்தகை.

திருமுறைப் பணியுடன் நின்றுவிடாது பல ஆலயங்களில் நடைபெறுகின்ற விழாக்களில் சரியைத் தொண்டையும் ஆற்றி வருபவர். மேலும் சைவ சமய பணிகள் ஆற்றிட நோயற்ற தளராத உறுதியுடன் நீண்ட ஆயுள் ஆரோக்கியத்தையும் எல்லாம் வல்ல எம்பெருமான் இவருக்கு கொடுக்க வேண்டும் என்று இறைவனை வேண்டி வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ க.சிவராசக்குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## கௌரவ ந.சிவசக்தி ஆனந்தன்

வன்னி பாராளுமன்ற உறுப்பினர்
அவர்களின்

# வாழ்த்துரை

## பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி

வேலணை மேற்கை பிறப்பிடமாகவும் 1960ம் ஆண்டிலிருந்து வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்டு வசித்துவருபவரும் ஆன்மீகம் மற்றும் சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவருமான திரு.வைத்திலிங்கம் செல்லத்துரை தேவராசா என்பவர் 2017.07.20ம் திகதி 80தாவது அகவையில் காலடி எடுத்து வைப்பதையிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

திரு.தேவராசா அவர்கள், அவரது இளம் வயதிலேயே வவுனியா மண்ணில் கால்பதித்தவர். அந்தக் காலப்பகுதியிலிருந்தே அவர் சமூகப்பணிகளிலும் ஆன்மீக செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதன் மூலம் பொது வாழ்வுக்கு அர்ப்பணமானவர். இவருடைய சமூகப் பணியை மதிக்கும் முகமாக இறைபணிச்செம்மல், திருவாசகச் செல்வர், திருவாசகக் கலாநிதி, கலாபூசணம் போன்ற பட்டங்கள் சூட்டப்பட்டு பாராட்டுக்கள் பெற்றவர். இவர் இந்து மாமன்ற தலைவராகவும், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும், திருக்கேதீஸ்வரம் ஆலய திருப்பணிச்சபை முன்னாள் உப தலைவராகவும் செயற்பட்டு மிகவும் மதிப்புப் பெற்றவர்.


இவரது ஆன்மீக வாழ்வு இவரை சமூகத்தில் மிகச் சிறந்த ஒரு மனிதனாக்கியுள்ளதை யாராலும் மறுக்க முடியாது. இவரது வயோதிப காலத்திலும் கூட திடமனதுடன் ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபடுவது இறைவன் இவருக்குக் கொடுத்த வரம் என்றே கூற வேண்டும். இவர் உடல் ஆராக்கியத்துடன் இவ்வுலகில் சிறப்பாக வாழ வேண்டும் என்பதுடன் இவருடைய பொதுப்பணி தொடர்வதற்கு இறை அருள் கிடைக்க வேண்டுமென வாழ்த்தி நிற்கிறேன்.

**ந.சிவசக்தி ஆனந்தன்**
வன்னி பாராளுமன்ற உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு.மு.சிற்றம்பலம்
(ஜனாதிபதி சட்டத்தரணி)
அவர்களின்
## வாழ்த்துரை

### இறைபணிச் செம்மல் வை.செ.தேவராஜா J.P அவர்கள் 80 வயதை எட்டுகின்ற வேளை வழங்கப்படும் வாழ்த்து

### தேவாரப்பிரியர்

**இ**றைபணிச் செம்மல் வைத்தியலிங்கம் செல்லத்துரை **தேவராசா** அவர்களை **தேவராசா அண்ணர்** என்று சொன்னால் அது அவரை மட்டுமே குறிக்கின்ற சொல்லென்று கருதி எல்லோரும் அறிந்து கொள்வர்.

வவுனியா பிரதேசத்தில் கைவிடப்பட்ட மரபான திருவாசக முற்றோதலுக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்து வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள பல ஆலயங்களில் 1500 ற்கு மேற்பட்ட முறை செய்து அரும்பணி ஆற்றியவர்.

அவரைப்பற்றி திரு.சி.ஏ.இராமஸ்வாமி அவர்கள் வாழ்த்துக்கின்ற போது "தெருவோரக் கோயிலென்றால் என்ன, தேரோடும் கோயில் என்றால் என்ன, தேவாரம் என்றால் தேவராஜா அங்கு இருப்பார்" என்று கூறினார்.

அந்த வார்த்தைகள் நூற்றுக்கு நூறு வீதம் உண்மையானவை. இறைவன் அவரிற்கு அசாத்திய நினைவாற்றலைக் கொடுத்து தேவார திருவாசகத்தை ஒப்பிக்கின்ற திறமையையும் கொடுத்து அவற்றை இனிமையாகப் பாடுகின்ற குரலையும் வழங்கியுள்ளார். **தனக்குத் தொண்டு செய்வதற்கு என்றே இறைவனால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர்.**

ஆழமான அரசியல் சித்தாந்தத்தைக் கொண்ட அவர் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கிய பின்னர் இறைபணி செய்வதையே தனது முதற்கடமையாகக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார்கள் பாடிய தேவாரத்தை அவர் இந்த பிரதேசத்தில் பாடாத கோயில்களே இல்லை. வவுனியா இந்து மாமன்றத்தை பூங்கா வீதியில் அமைத்து அதன் தலைவராகவும் செயலாளராகவும் சைவம் தளைத்து ஓங்க அரும்பணி ஆற்றியவர்.

இதைவிட வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்திலும் மணிவாசகர் சபையிலும் பெரும் பங்காற்றியவர்.

**இறைபணிச் செம்மல்** என்ற சொற்பதம் எதைக் குறிப்பிடுகிறதோ அதுவாக நின்று வாழ்ந்து காட்டியவர். வவுனியா சமூகத்திலிருந்து பிரிக்க முடியாத ஒருவராக அவர் திகழ்கிறார். அவருடைய சேவை **திருவாசகச் செல்வர், கலாபூஷணம்** போன்ற இன்னும் பல பட்டங்களினால் கௌரவிக்கப்பட்டது. பட்டங்கள் வழங்கிய கௌரவத்திலும் பார்க்க அவர் அந்த பட்டங்களை கௌரவித்தார்.


80 ஆண்டுகள் ஒரு மனிதனின் வாழ்வில் நீண்ட காலம். அந்தக் காலத்தில் இறை பணிக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அவர் இன்னும் பல ஆண்டுகள் சிறப்பாக வாழ்ந்து சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டாற்ற இறைவன் அருள் புரிய வேண்டும் என வேண்டி விடைபெறுகின்றேன்.

**மு.சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## கலாகீர்த்தி உடுவை எஸ்.தில்லைநடராசா
அவர்களின்
# வாழ்த்துரை

## மனமும் தோற்றமும் மாறாதிருக்கும் இறைபணிச் செம்மல்

1973ம் ஆண்டு வவுனியாவில் முதன் முதலாக பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட போது, நிர்வாக வேலைகளுக்குப் பொறுப்பான நியமனத்துடன் கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு இடம் மாறி வந்தேன்.

அன்றைய வவுனியா நகர் என்பது A9 வீதியில் வைத்தியசாலையில் ஆரம்பித்து தமிழ் மகா வித்தியாலயத்துடன் முடிவது போலவும், மன்னார் வீதியில் குருமன்காட்டுச் சந்தியை ஓர் எல்லையாகவும், ஹொறவப்பொத்தான வீதியில் இறம்பைக்குளத்தை மறு எல்லையாகவும் கொண்ட சிறு இடம் போலவே எனக்குத் தோற்றமளித்தது.

வெகு சிரமத்துக்கு மத்தியில் வைரவபுளியங்குளத்தில் தங்கியிருக்க அறையொன்றை வெறும் இருபது ரூபா வாடகையில் பெற்றுக் கொண்டேன். இருபது ரூபா என்பது மாதாந்த சம்பளத்தில் பதினைந்தில் ஒரு பங்கு.

சொந்தமாக ஒரு சூட்கேஸ். ஒரு தலையணை. ஒரு பாய். இவை எனது உடமைகள். நிலத்தில் நெடுநேரம் குந்தியிருந்து வாசிக்க எழுத சிரமம். கதிரையொன்றைச் சொந்தமாக வாங்க சிலரின் பரிந்துரைக்கேற்ப தருமலிங்கம் வீதியில் **"கண்ணகி"** தளபாட விற்பனை நிலையத்துக்குச் சென்ற போது முதலில் முகப்பில் கதைத்தவர் தேவராசா என்பதைப் பின்னர் அறிந்து கொண்டேன்.

அறிமுகமே இல்லாத போதும் கதிரைக்கு பத்துரூபா விலை சொல்லிய போது, பத்து ரூபா பணம் கொடுக்க கதிரையையும் மூன்று ரூபா மிகுதிப்பணத்தையும் தந்தார். ஏழு ரூபாக்கதிரை சுமார் இருபது வருடங்கள் என்னோடு இருந்தது. ஆனால் தேவராசாவின் நட்புத்தொடர்ந்த வண்ணம் இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் கதிரை வாங்கிய கதையை ஒருவரிடம் சொன்னபோது "கண்ணகி தேவராசாவா? அவர் தடித்த தமிழரசு" என்று சொல்லி தமிழரசுக்கட்சியுடனும் - தமிழரசுக்கட்சியோடு நெருங்கிய தலைவர்கள் அரசியல்வாதிகள் பற்றியும் சொன்னார்.

பின்னர் போகப்போகத்தான் அரசியலுக்கு அப்பால் தேவராசா ஆன்மீக சமயச் சமூகச் செயற்பாடுகளில் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர் என்பதை அறிய முடிந்தது.

1973ல் சாதாரண சைக்கிளில் சாதாரண வேட்டி அரைக்கைச் சேட்டுடன் வவுனியாவை வலம் வந்த போதும் சரி, சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் வவுனியாவில் வங்கிக்கட்டிடமொன்றை நிர்மாணித்து மோட்டார் சைக்கிளில் விரைவாக அங்குமிங்கும் பறந்து திரிந்த போதும் சரி இன்றைய நாட்களில் கோவில் கொண்டாட்டங்கள், பொது நிகழ்வுகள் ஆகியவற்றில் ஆரம்பமுதல் நிறைவு வரையில் முன் வரிசையில் அமர்ந்து கொள்ளும் தேவராசாவின் தோற்றமும் சதா புன்சிரிப்புடன் தோன்றும் முகமும் எல்லோருக்கும் நல்லதை செய்ய விரும்பும் மனமும் மாறாதிருப்பதை உணர முடிகிறது.


**"திருவாசக முற்றோதல்"** உட்பட பல விடயங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, நானறிந்த வகையில் நாற்பத்தைந்து வருடங்களாக ஒரே மாதிரியான தோற்றம் சிந்தனை, நடை உடை செயற்பாடுகளில் நாட்ட மிக்க **இறைபணிச் செம்மல், கலாபூஷணம் வை.செ.தேவராசா அமுதவிழா**வுக்கு அப்பால் நூறாண்டு வாழ வாழ்த்துக்கள்.

**உடுவை எஸ். தில்லை நடராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## பேராசிரியர் டாக்டர் கனகசாபதி நாகேஸ்வரன்

தமிழ்ப் பேராசிரியர் - மொழிகள் துறை
சப்பரகமுவ பல்கலைக்கழகம் - பெலிகுல்லோயா
அவர்களின்

# வாழ்த்துரை

## எண்பதாண்டகவை எய்தும் ஏந்தல் தேவராசர் வாழி!

**காப்பு**

துங்கக் கரிமுகத்துத் தூமணியே கற்பகமே
சங்கத் தமிழளித்த தத்துவனே - தயாபரனே
பங்கமறத் திருவாசகத்தைப் பாரினிலே பரப்பிவரும்
எங்கள் **தேவராசருக்** கருள்


தொண்டன் சிவனடியான் சீராளன் சினமறியான்.
அன்பன் அனுபவத்தால் அமைதி குடிகொண்டான்.
**வைத்தியலிங்கம் செல்லத்துரை தேவராச**ப் பெரியோன்
சமயம், மொழி, சமூகம், சேவை அறப்பணிகள் புரிநெஞ்சன்!
அகிலாண்டேஸ்வரர், சிவனார் ஆலயத்தின் உபதலைவர்!
மணிவாசகர் சபையின் தலைவ! வவுனை இந்துமாமன்றத்தின்
மதிப்பார்ந்த தலைவ! திருக்கேதீச்சரத்தான் திருப்பணியினுபதலைவ!
ஈழத்தின் மூலை முடுக்கெங்கும் இலண்டனிலும்
சிவனுறையும் கைலாயம் ஈறாகத் தித்திக்கும்
திருவாசகம் ஓதும் செயல்வீரன்! பொறுமை நிறை கற்பரசி
**பாலாம்பிகை** கணவர் பத்துப்பேர் புத்திரர்கள்!!
**திருவாசகச் செல்வர், திருவாசகமணி, திருவாசகக் கலாநிதி** இவை
தேனினுமினிய திருவாசகத் தமிழால்சேர்ந்த புகழ்ப்பட்டம்!
அரச **கலாபூசணமும், ஈழத்துச் சிவனடியார் இறைபணிச் செம்மல்**
**பெரியபுராண மாமனிதர்** கௌரவமும் இவர் பணியின் பெரும்பேறு!!
மென்பத்தி அருள்நாடல் சான்றோர் நட்பு, அறிவுறவு சேவைமனம்
வைராக்கிய நம்பிக்கை இறையின்பம் இவர்வாழ்வு! இனியும்
எதிர்காலம் வெல்க இனிது!!!

சுபம்

மனமுவந்து வாழ்த்துவோர்
**பேராசியர் டாக்டர் கனகசாபதி நாகேஸ்வரனும்**
**குடும்பத்தினரும்.**
071-44453466

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு. கா.உதயராசா
பிரதேச செயலாளர்
வவுனியா.
அவர்களின்

# வாழ்த்துரை

"ஒன்றா உலகத்து உயர்ந்தபுகழ் அல்லால்
பொன்றாது நின்பதொன்று இல்."

என்றான் வள்ளுவன் அந்த வகையான பேறு பெற்றோர் உலகில் மிக அரிதிலும் அரிது என்றே கூறலாம். இறை அருளும் தென்புலத்தார் ஆசியும் இதற்கு மிகத் தேவையானவை. அவ்வகையில் ஆசீர்வதிக்கப்பட்ட ஒருவராக நாம் காண்பது **இறைபணிச் செம்மல் வை.செ.தேவராசா ஐயாவையே**. அகவை எண்பதிலும் அன்னார் மேனி நுடங்காது. செயல்வன்மை துவளாது சமயப்பணி செய்யும் இயல்பு இறைவனால் வழங்கப்பட்ட வரமே எனலாம்.

யாழ்மாவட்டம்வேலணையைப்பிறப்பிடமாகக்கொண்டாலும்,ஐம்பதுவருடங்களிற்கு மேற்பட்ட அன்னாரின் சமய சமூகச் சேவையை பெற்றது வவுனியா மண்ணே எனலாம். அவ்வகையில் எமக்கெல்லாம் பெருமை சேர்த்தவர் ஐயா அவர்கள். சிவசேவையை இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, கனடா, இலண்டன் போன்ற இடங்களிலும் வழங்கி வரும் பெருமை அவருக்கே உரித்தான பண்பு ஆகும். எப்போதும் சிரித்த முகமும், சுறுசுறுப்பான சுபாவமும் கொண்டு இயங்குபவர் ஐயா அவர்கள். இவரது தோற்றப்பொலிவு இந்து ஒருவன் எவ்வாறு வாழ வேண்டும் என்ற விதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது. சமய இலக்கியங்களில் ஐயா அவர்களுக்கு உள்ள பரிச்சயம் பல்லாயிரம் ஆலயங்களில் அவர் திருவாசக முற்றோதல்களை நிகழ்த்தியதன் வாயிலாக அறியக்கிடக்கிறது.


சமயப்பணிகளோடு மட்டும் அவர் செயற்பாடு நின்று விடாது பல ஆலயங்களின் எழுச்சிக்கான நிதி உதவிகளையும் செய்தவர். பல வறிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு வழி வகுத்தவர். ஆதரவற்ற சிறார்களுக்கான அமைப்புக்களில் அங்கத்தவராக இருந்து இன்றும் சளைக்காது பணி செய்து வருபவர். அன்னார் எண்பது வயது அல்ல நூற்றாண்டு காலம் வாழ்ந்து சமய சமூகப்பணி செய்ய எல்லாம் வல்ல ஆடல் வல்லானான எம் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**கா.உதயராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு.கு.சிதம்பரநாதன்

பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா.
அவர்களின்

# வாழ்த்துரை

**அமுதவிழா**க் காணும் அண்ணல் தேவராஜா அண்ணர் அவர்களின் பெருமையைப் பேச நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இவர் எல்லோராலும் **கண்ணகி தேவராஜா** என்று அன்பாகவும், கனிவாகவும் அழைக்கப்படுபவர். யாவருடனும் இனிமையாகவும், எளிமையாகவும் பழகக்கூடியவர். இறைபக்தி மிக்கவர். எல்லோருக்கும் உதவக்கூடிய எண்ணங்கொண்டவர். செல்வந்தரும் கூட.

"நல்லார் கட்பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார் கட்பட்ட திரு"

என்ற வள்ளுவர் வாய் மொழியை நினைவுபடுத்தக் கூடிய வகையில் கல்வியையும் திருவையும் ஒருங்குசேரப் பெற்ற பெருந்தகை. சிறுவயதினரிடமும் கூட எளிமையாகவும், மரியாதையுடனும் அன்புடனும், பழகக்கூடிய ஆளுமை கொண்ட வள்ளல்.

"பணிவுடையான் இன்சொலனாதல் ஒருவர்க்கு
அணியல்ல மற்றுப் பிற"

என்ற வார்த்தையை நினைவுபடுத்தக்கூடியவர். பண்பான மனைவி, அருமையான பிள்ளைகள், அன்பான மருமக்கள், செல்லமான பேரப்பிள்ளைகள், என வம்சவிருத்தி வரப்பெற்றவர். தீர்க்க ஆயுசு, நோய் பிணி அற்றவாழ்வு என வாழ்வாங்கு வாழும் மரபு மிக்கவர். அவரும் அவர் வம்சமும் சிறப்புடையது. மேலும் சிறந்து வாழும்.

ஐயா! நீங்கள் மேலும் செழுமையான வாழ்வும், பின்னோர் பின்பற்றிச் சிறக்கவும், அயலோர் அன்புடன் வாழ்த்தவும் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழவும், ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி வாழையடி வாழையாக வாழ வேண்டும் என்றும் வாயார, மனமார வாழ்த்துகிறேன்.


"நன்றி"

அன்புடன்
**கு.சிதம்பரநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர்
சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்
**இரத்தினம் நித்தியானந்தன்** (M.A Cultural)
அவர்களின்

# வாழ்த்துரை

**இ**றைபணிச்செம்மல் வை.செ.தேவராசா அவர்களது **அமுதவிழா**வை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

என்றும் இளைஞனாக மோட்டார் சைக்கிளில் வலம் வரும் இவர். திருமுறைகள் முறைப்படி உரிய இராகத்துடன் ஓதப்படுதல் வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருப்பார். இதற்காக, தானே பல ஆலயங்களில் திருமுறை ஓதும் பணியை பாரமெடுத்து விதிமுறை பிழையாது ஓதியும் வருகின்றார்.

சைவசமயத்தவர்கள் என்று பெயர் சொல்லிக் குறிப்பிடத்தக்கவகையில் சிந்தனை, சொல், நடத்தை வழிப்பட்ட இவர், தனது குடும்பத்தையும் அந்த வழியில் நடாத்திச் செல்வது கண்கூடு.

பொதுப்பணிகள் என்றால் என்றும் தயங்காது நிதியுதவி வழங்கும் மனப்பான்மை கொண்டவர் வை.செ.தேவராசா ஐயா அவர்கள். இதனை வவுனியா பிரதேச செயலகத்தில் விநாயகருக்கு ஆலயம் அமைத்தவேளையில் என்னால் முதன் முதலில் கண்டுகொள்ள நேர்ந்தது. இவ்வாறு தொடர்ந்து பல பொது வைபவங்களில் இவரது உடல், உள, நிதிப்பங்களிப்பினை நான் கண்டிருக்கின்றேன்.

வவுனியா மண்ணில் திருவாசகத்திற்கு தனியிடம் இருக்கின்றதென்றால் அதற்கு முதற்காரணம் ஆனவரும் **தேவராசா ஐயா** என்றால் மிகையில்லை. வவுனியாவில் மூலை முடுக்கெல்லாம் சென்று திருவாசக முற்றோதலை இடையறாது நடாத்திவரும் பெருமையும் இவருக்குண்டு.

வவுனியா இந்துமாமன்றம், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், வவுனியா கோவில்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவஸ்தானம் ஆகியவற்றின் வளர்ச்சியிலும், பிரகாசிப்பிலும் தனது முழுமையான பங்களிப்பை வழங்கிய இவர், இன்றும் மேற்படி நிறுவனங்கள் சிறப்புற இயங்க வேண்டும் என்பதில் ஆலோசனையும், வழிகாட்டுதலும் வழங்கி வருவது கண்கூடு.

எனவே, அமுதவிழா கண்டிருக்கும், கலாபூஷணம் வை.செ.தேவராசா ஐயா அவர்கள் இன்னும் பல்நூறாண்டுகள் வவுனியா மண்ணில் வாழ்ந்து பொதுச்சேவைகள் புரிந்திட ஆண்டவனை பிரார்த்தித்து அமைகின்றேன்.

சுபம்


இ.நித்தியானந்தன்

மாவட்ட செயலகம்
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சிவநெறிப்புரவலர்

**சி.ஏ.இராமஸ்வாமி (ஈசன்)**

அவர்களின்

# வாழ்த்துப் பா

ஐம்பது ஆண்டுக்கு மேலாக
அன்புடன் பழகிய நண்பர் இவர்
தெம்பது தந்தவர் இவர்எனக்கே
தேவார திருவாசகம் பாடிடவே
இன்பமும் கண்டேன் இவர்பாட
ஈர்த்துக் கொண்டார் இவர்அதனால்
அம்பிகை கணவர் அரன்சிவனார்
இவர்என்றும் போற்றும் தெய்வமுமாம்

(வேறு)

கண்ணகி ஸ்டோர்ஸ் என்னும் கடையினிலே
கனித்தமிழ் நூல்களை விற்றவர் தான்
அண்ணன் என்று அரசியல் தலைவர்
அழைத்தனர் அன்றோ அந் நாளில்
மண்ணிற் பிறந்த பயன் அறிந்து
மார்கழி பஜனையைத் தொடங் கியவர்
எண்ணிலார் கோயில்தனில் சென்று
ஆயிரம் மேல் திருவாசகம் ஓதியவர்

விண்ணுயர் கைலாசம் சென்று வந்தார்.
விருப்புடன் சிதம்பரம் சென்று வந்தார்.
நண்ணிய போதில் நயம் மிகவே
நற்திரு வாசகம் ஓதி வந்தார்.
பண்ணுடன் பலமுறை திரு முறைகள்
பாரெங்கும் பரவிட பாடி நின்றார்
கண்ணெனக் கருதிடு கடவுளுமாய்
கருதினர் நட்டம் புரி சிவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

தேவாரம் என்றால் **தேவராசா**
தேடுவார் அன்றோ அந்நாளில்.
சாவா ராய்எவர் இருந்தாலும்
சென்றங்கு திருவாசகம் பாடிடுவார்.
வாவா என்றல்லோ அழைத்திடுவார்.
வெளியிலும் வரச்சொல்லி கூப்பிடுவார்.
நாவாரப் பாடி நாள்முழுதும்
நல்லருள் பெற்றவர் தானேஅன்றோ

நொந்து நின்ற சங்கங்களை
தூக்கி நிறுத்தி நிரந்தரமாய்
அந்திபகல் என்றே பாராதே
அவசியம் கருதி பாடுபட்டார்.
இந்துமா மன்றம் ஆனால்என்ன
இந்து இளைஞர் ஆனால்என்ன
எந்த சங்கமும் எம்சங்கம்
என்பதில் ஆர்வம் கொண்டவராம்.

துணையென வாழ்க்கையில் இருந்தவரை
தூயநல் இறைவனும் அழைத்துக்கொண்டார்
இணையிலா அன்பினைக் கொண்டிருந்தார்
என்றும் நினைவில் இருக்கும்படி
மணவினையோடு அன்ன தானம்செய்ய
மண்டபம் ஒன்றினைக் கட்டிக்கொடுத்தார்
பாலாம்பிகை நினைவு மண்டபம்தான்
விளங்கிடு ஆதிவிநாயகக் கோவிலிலே

பிள்ளைகள் பத்துக்குத் தாயிவளாம்
பண்புக்கும், அன்புக்கும் உறைவிடத்தாள்
எள்ளுக்குள் எண்ணையாய் இருந்தவரே
இரவொடு பகலும் காத்திருந்தார்
முள்ளுப் படுக்கையாம் நாள்தனிலும்
முகம்சுளிக் காதிவர் வாழ்ந்தவர்தான்
வெள்ளை மனத்தப் பெண்ணேயிவர்
வெளியார் அறியாவோர் உத்தமியாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை பெருமைக்கும் உரியவரே
என்பது அகவையில் அடிவைத்தார்
முத்தனும் ஆகிடும் அகவையிது
முழுமையு மாயிவர் வாழ்ந்துவிட்டார்
பெற்றவள் இல்லை பெருமைபெற
பெற்றவர் இருக்கிறார் பெருமைசொல்ல
நித்தமும் நலமுடன் நீடுவாழ
அத்தனாம் அரன்பதம் வேண்டுகிறேன்.

வாழ்த்தி வழங்கியவர்
சிவநெறிப்புரவலர்
**சீ.ஏ.இராமஸ்வாமி (ஈசன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## பண்டிதர் வீ.பிரதீபன்

கலாசார உத்தியோகத்தர்,
வவுனியா.
அவர்களின்

# வாழ்த்துப்பா

அகவை எண்பதை அழகாய் காணும்
அன்பு நெஞ்சமே தேவராசரே!
இக, பர சுகம் இரண்டும் நீர்பெற
இன்பமுற்று நாம் வாழ்த்து நல்கினோம்
அழகு செந்தமிழ் சைவமும் பேணி
அலகில் புகழுடை ஐயனே நீர்
உலகுடை வரை உள்ள பணி செய்து
உத்தம வாழ்வு பெற்றிட வாழ்த்து.


பகரும் வாசகத் தேன் பருகியே
உருகும் வாழ்க்கை உம் வாழ்க்கையல்லவோ
வேலணைப் பதி மேவி வந்தும், நீர்
வேண்டும் சேவையை வவுனியா நகர்
இறை பணியுடை செம்மல் என்றுமே,
இனிமையான ஓர் நாமம் பெற்றனை
கறை படிந்திடா வாழ்வு கண்டுநீர்
அகவை எண்பதில் கால் பதித்தனை.

சிவபரம் பொருட் சீலமும், இறை
நல்கு வாழ்க்கையின் யோக மும்
உடலின் உள்ளுறை நன்னலம் மிகை
ஊக்கமும் பெறத் துடிக்கை யான்
அருளும் பெருகிட உரனும் பெற்று நீர்
அகவை நூறுகண்டு இனிது வாழ்ந்திட
வித்தை கூடிய அறிஞர் வாழ்த்திட
விரிந்த ஞானமும் கூடி வாழ்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு.க.சுவர்ணராஜா

உபபீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா.
அவர்களின்

# வாழ்த்துரை

### அன்பு ஒருவருக்கு அவருடைய வாழ்க்கை நோக்கத்தைக் கொடுக்கின்றது.

“உங்கள் வார்த்தைகளைவிட உங்கள் வாழ்க்கையைக் கொண்டு உங்களால் சிறப்பாக போதிக்க முடியும்” என ஆலிவர் கோல்டு வெல் என்ற தத்துவவியலாளர் குறிப்பிடுகின்றார்.

மேற்கண்ட சிந்தனையின் கருவூலமாக நான் கருதுவது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய **கண்ணகி தேவராஜா** அண்ணை அவர்களைத்தான்.

எனது சிறு வயது முதல் ஒரு நேர்மைமிகு வர்த்தகராகவும், சமூகப்பணியாளனாகவும், ஆன்மீக சிந்தனை உடையவராகவும், எல்லாவற்றிற்கும் மேலாக மிகவும் எளிமையான முறையில் எல்லோரிடமும் நட்புக் கொள்ளும் ஒரு பண்பாளனாகவும் அவரை நான் சந்தித்து வருகின்றேன்.

கல்வியால், பணத்தினால், பதவிகளால், அரசியலினால் மட்டும் மகத்தான முன் உதாரணமாக ஆழமும் அர்த்தமும் கொண்ட வாழ்க்கையை உருவாக்க முடியும் என்பதைவிட அன்பினால், பண்பினால், காலமறிந்து உதவுவதாலும் மகத்துவமும் ஆழ்ந்த அர்த்தமும் கொண்ட ஒரு வாழ்க்கையை நம் ஒவ்வொருவரும் உருவாக்க முடியும் என்பதற்கு நல்லதொரு உதாரணமாக நடமாடும் பல்கலைக்கழமாக **தேவராஜா அண்ணா** வாழ்ந்து வருகின்றார்.

எனது பேராசன் அகளங்கன் அவர்களின் இலக்கிய வழிகாட்டல் ஊடாக, **ஈசன் ஐயா, குளோப் இராசலிங்கம் அண்ணா, தேவராசா அண்ணா** போன்றோரது அன்பான ஆதரவு எனக்கு கிடைத்தது.இவர்கள் எல்லோரும் என்னை சந்திக்கும் போதெல்லாம், வாழ்த்துவதும்,நலம் விசாரிப்பதும், எனக்கு ஆலோசனை வழங்குவதும் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. இவர்களில் இன்று தேவராஜா அண்ணைக்கு ஒரு பெருவிழா.

"தினமும் சில சிறிய மகத்துவமான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்ற கோட்பாடு மிகவும் சக்தி வாய்ந்தது. என நான் நம்புகின்றேன்" அந்த சக்தியாக வவுனியா மக்களின் ஆன்மீக நிகழ்வுகளிலும், இலக்கிய விழாக்களிலும், துன்பமான தருணங்களிலும் ஒரு பக்கத்தில் தேவராஜா அண்ணாவின் குரல் தவறாது ஒலிக்கும்.

தினமும் ஏதாவது ஒரு சேவை, என வாழும் இவரின் 80 ஆம் ஆண்டு நிகழ்வில் அவரைப்பற்றி எழுதக்கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.


இச்சந்தர்ப்பத்தில் எனது மரியாதை கலந்த வணக்கத்தை தெரிவிப்பதோடு, கண்ணகி தேவராஜா அண்ணா நீண்ட காலம் வாழ இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**க.சுவர்ணராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மக்கள் சேவை மாமணி

**நா.சேனாதிராசா சமா.நீதி.**

தலைவர்

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் - வவுனியா.

அவர்களின்

# வாழ்த்துரை

## ஐம்பது ஆண்டுகளைக் கடந்த அரிய சேவையாளர்

வவுனியா வைரவர்புளியங்குளத்தைச் சேர்ந்த கலாபூசணம் வை.செ.தேவராஜா சமா.நீதிபதி அவர்களது எண்பதாவது பிறந்த நாளை ஒட்டி வெளியிட இருக்கும் விழா மலர் மூலம் இவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் எனக்குப் பல வருடங்கள் மூத்தவனாக இருந்து கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக என்னுடனும், எனது சகோதரர்களுடனும் எங்கள் குடும்பத்தில் ஒரு மூத்த சகோதரன் போன்று வாழ்ந்து வந்தது எமக்கு பெருமை தருவதாகும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே அரசியல், சமூக, சமய நிகழ்வுகளிலும் ஒன்றாக உழைத்துள்ளோம். இவர் ஒரு மெலிந்த உடலமைப்பை கொண்டவராக இருந்தும். உறுதியுடனும் பற்றுடனும், துணிவுடனும் நினைத்த காரியங்களை நிறைவேற்றுவதில் ஒரு திறமைசாலி ஆவார்.

இவரது சமய, சமூக தொண்டுகளையும், அரசியல் தொண்டுகளையும் அருகில் இருந்தும், சேர்ந்தும் சேவையாற்றியவன் என்ற வகையில் இவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. எமது சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் நீண்ட கால உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து சேவையாற்றிய பெருமை இவரைச்சாரும். சங்கத்தின் ஆரம்ப காலத்திலேயே துடிப்புள்ள இளைஞனாக சங்கத்தின் வளர்ச்சிப் பாதைக்கு சேவையாற்றினார் என்பதை நான் நன்கு அறிவேன்.

இவர் தொடர்ந்தும் நல்ல தேக ஆரோக்கியத்துடனும் நோய்நொடி இல்லாமலும் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து தனது பணியை ஆற்ற இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றி


“மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்”

**நா.சேனாதிராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# கலாபூஷணம் க.ஐயம்பிள்ளை

தலைவர் - சேக்கிழார் மன்றம், வவுனியா.
இளைப்பாறிய பிரதேச செயலாளர்.
அவர்களின்

# வாழ்த்துரை

## உழைப்பால் உயர்ந்த உத்தமர்

**இறைபணிச் செம்மல், திருமுறைச் செல்வர், திருவாசக கலாநிதி, கலாபூசணம் வை.செ.தேவராசா** அவர்கள் 80 வயதினையெய்தி **அமுதவிழா** காணும் பொழுதில் அப்பெரியாரை வாழ்த்தும் பேறு கிடைத்ததையிட்டு பேருவகை அடைகின்றேன். சாதாரண நிலையிலிருந்து தமது கடின உழைப்பாலும் அயரா ஊக்கத்தினாலும் செய்யுந் தொழிலிலே அக்கறையுடன் தம்மை ஈடுபடுத்தியமையால் இன்று குன்றின் மேலிட்ட தீபமாகி உயர்ந்து வளர்ந்து எல்லோராலும் மதிக்கப்படும் நிலையில் போற்றும் நிலையில் சிறப்புற வாழ்ந்து வர இறைவன் திருவருள் இடையறாது கிடைத்து வருகின்றது.

**கண்ணகி புத்தகசாலை** முதலாளியாக அறிமுகமாகி, **கண்ணகி மரக்காலை கண்ணகி யானை சோடா**வாகப் பரந்து வளர்ந்து **கண்ணகி கட்டிட ஒப்பந்தக்காரராக** உயர்ந்து பொருளாதார ரீதியில் பெரு வளர்ச்சி கண்ட பெரியார் தேவராசா அவர்கள் இல்லற வாழ்விலும் இணையற்ற கணவனாக மக்கள் பத்து பேரினதும் பாசமிகு தந்தையாக மகிழ்வோடு வாழ்ந்தவர். சிறப்புற இல்லறம் நடத்தியும் அதற்கு அத்திவாரமாக அமைகின்ற பொருளாதாரத்திலும் குறைவற்ற செல்வம் பெற்று வாழ்ந்தார்.

தொழிலில் காட்டிய அக்கறையளவுக்கு அரசியலிலும் ஈடுபட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உளமொன்றிய தொண்டனாக தந்தை செல்வாவின் விசுவாசியாகவும் வாழ்ந்தவர். இளம்வயதிலேயே குடும்பக் கடமைகளுக்குத் தோள் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட இவர் தமது பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தி அனுபவக் கல்வியைத் தொடர்ந்தார். தொழில் பங்காளிகள் பல பாடங்களைக் கற்றுக் கொடுத்தனர், அரசியல்வாதிகள் பல விடயங்களைக் கற்றுக் கொடுத்தனர். சமூக சேவகர்களெனக் காட்டிக் கொண்டு நெருங்கிப் பழகியவர்கள் பாடம் புகட்டினர். இவையெல்லாவற்றிலும் பெற்ற அனுபவக் கல்வி இவரைப் பட்டை தீட்டிய வைரமாக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று செயற்பட்ட இவரை மகேசன் சேவை மக்களைச் சென்றடையும். மக்களை நன்றாக வாழவைக்கும் என்று நாணயத்தின் மறுபக்கத்தை அவரது துணைவியார் காட்டினார். அத்துறையில் கவனஞ் செலுத்திய திரு.தேவராசா அவர்கள் **ஆலய சேவை, திருமுறை பாராயணம், திருவாசக முற்றோதல், அன்னதானம்** போன்ற பல்வேறு இறைபணிகளை ஆற்றிவந்தார். தில்லை மன்றுளாடியார் இவரின் இதயமன்றில் ஆடினார். திருக்கேதீஸ்வர நாதனின் அணுக்கத் தொண்டரானார். பரிபாலன சபையின் நிர்வாகத்திலும் ஒருவரானார்.

அதைப் போலவே, வவுனியா கோயிற்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆட்கொண்டார். "எங்கட கோயில் எங்கட கோயில்" எனக் கூற வைத்தார். திருமுறை பாட வைத்தார். திருத்தொண்டு புரிய வைத்தார் அகிலாண்டஸேஸ்வரர் பெருமான். இறை பக்தியும் திருத்தொண்டும் இலங்கை அரசின் இந்து கலாசாரத் திணைக்களத்தால் **"இறைபணிச் செம்மல்"** என்னும் பட்டத்தைச் சூட்டிவைத்தன.

ஆலயங்களிலே புராணபடனஞ் செய்தல், திருமறை முற்றோதல், திருவாசக முற்றோதல், மணிவாசகர் சபையமைத்து அதன் தலைவராக விருந்து சமய அறிவுப் போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்கல், சமயப் பேச்சுக்கள், பஞ்சபுராண பாராயணம், திருவாசக நூலைப் புதுப்பித்துத் தமது சொந்தச் செலவில் வெளியிட்டமை போன்ற இறை பணியும் கலைச் சேவையும் இவருக்கு **"கலாபூசணம்"** பட்டத்தை ஈட்டிக் கொடுத்தன.

இவரது ஆலயத் திருத்தொண்டினையும், அகங்குழைந்து திருவாசக முற்றோதல் செய்யும் பாங்கினையும் நன்றாக அவதானித்த மன்னார் மாவட்ட பிரதான ஆலயங்கள், சமய நிறுவனங்கள், சமய ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து **திருவாசக கலாநிதி** என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர். தென்னிந்திய திருத்தலயாத்திரைகளின் போதெல்லாம் திருவாச முற்றோதலைச் செய்து தமிழ் நாட்டு ஓதுவார் மூர்த்திகளே பாராட்டினார்களெனின் திருவாசக கலாநிதியவர்களின் குரல்வளமும், திருவாசகத்துக்குரிய குழைவும், உச்சரிப்புத் தெளிவும் இவரது பாடல்களுக்கு வளமூட்டின. "சிதம்பரம் கோயிலிலே ஆடல்வல்லான் சந்நிதியிலே திருவாசகத்தைப் பலமுறை முற்றோதல் செய்த பேறு பெற்றவர் இவர். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" ஆடல் வல்லான் ஆட்டுவிக்கிறான், கலாபூசணம் திருவாசக கலாநிதி உயர்திரு.தேவராசா அண்ணா அவர்கள் ஆடுகின்றார். ஆடல் இன்னும் பல்லாண்டு தொடர வேண்டும் என்று மன்றுளாடியின் மலரடி பணிந்து வாழ்த்துகின்றேன்.


அன்பே சிவம்

அன்பன்

**க.ஐயம்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## சிவபூஜாதுரந்தரர் ஆ.நவரெத்தினராசா

தர்மகர்த்தா, கௌரவ செயலாளர்
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில்,
கோவில்குளம்
அவர்களின்

## வாழ்த்துரை

# அகவை எண்பதில் இறைபணிச்செம்மல்

தனது எண்பதாவது வயதை நினைவு கூர்ந்து சிறப்பிக்கும் **இறைபணிச் செம்மல் திரு.வைத்தியலிங்கம் செல்லத்துரை தேவராசா ஐயா** அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழுக்கும், சைவத்திற்கும் சேவை செய்ய இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

இறைபணிச்செம்மல் திரு.வைத்தியலிங்கம் செல்லத்துரை தேவராசா ஐயா அவர்கள் வேலணை மேற்கு என்னும் ஒரு புண்ணிய கிராமத்தில் ஆலயங்கள் நிறைந்த பூமியில் பிறந்தவர் என்பதால், இவர் இளம்பராயம் தொடக்கம் தமிழையும் சைவத்தையும் இரு கண்கள் போல் போற்றி வருகின்றார். இதனால் அன்றைய வாழ்விலும் இல்லற ஞானியாகவே வாழ்ந்து வந்தவர். தனது வாழ்க்கையை வவுனியா மண்ணில் கால் ஊன்றிய காலம் தொட்டு வவுனியாவில் சமய வளர்ச்சிக்காக அவரால் எடுக்கப்பட்ட முயற்சிகள் அளப்பெரியன. சைவசமயத்தின் மேல், அபரிமிதமான பற்றுக் கொண்டவர். ஏனைய மதத்தவர்களையும் மதித்து நடக்கும் பண்பு கொண்டவர்.

எமது ஆலயம் 1996ம் ஆண்டு குடமுழுக்குக் கண்ட காலம் முதல் இன்றுவரை ஆலயத்தின் **உபசெயலாளராகவும்** இருந்து சிறப்பித்து வருகின்றார். திருவாசகத்தில் அவருக்கு உள்ள விருப்பு அளவிடமுடியாதது. பன்னிரு திருமுறையை **1996ம் ஆண்டு முதல் வருடம்தோறும் எமது ஆலயத்தில் முற்றோதல் செய்துவருவது** அவருக்கு திருமுறையில் இருக்கும் பக்தியையும் தெய்வீகத் தன்மையையும் புலப்படுத்துகின்றது.

தனது எண்பதாவது வயதை சிறப்புற பூர்த்தி செய்து அதை ஆவணப்படுத்த வெளியீடு செய்யும் மலருக்கு எனது வாழ்த்துரையை பெறுவது எனக்குப் பெருமையைத் தருகின்றது. பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்திற்கும் சேவை செய்ய வேண்டும். இவருக்கு எம்பெருமானின், ஆசி என்றென்றும் கிடைக்க வேண்டி அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப்பெருமானின் பாதாரவிந்தங்களை பணிந்து நிற்கின்றேன்.

சுபம்.

**ஆ.நவரெத்தினராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அறநெறிச்செல்வி, பத்திராதுரந்தரி, சக்திமானச பூஜா கல்பதா

**செல்வி.கு.ஜெயராணி (சாமி அம்மா)**

ஆலய தர்மகர்த்தா, வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்
தலைவர் இந்து அன்பகம், வேப்பங்குளம், வவுனியா.

அவர்களின்

# ஆசியுரை

திருமூலரால் **சிவபூமி** என சிறப்பித்துக் கூறப்படுகின்ற இலங்கைத் திருநாட்டிலே சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் வடபகுதியின்பால் அமைந்துள்ள வவுனியா மாவட்டத்திலே **சிவப்பணியே வாழ்வெனக் கொண்டு வாழ்ந்து வருகின்ற வவுனியா இந்துமாமன்ற தலைவர், இறைபணிச் செம்மல், கலாபூசணம், திருவாசக கலாநிதி வை.செ.தேவராசா ஐயா** அவர்களின் எண்பதாவது அகவை ஆரம்ப நிகழ்வை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற இந்நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.


"ஈழத்துத் தமிழ்பண்பாட்டிலே முக்கிய பகுதி சைவத் தமிழ்ப் பண்பாடாகும். ஈழத்தின் ஆரம்ப காலந்தொட்டே இப்பண்பாட்டின் கூறுகள் தோற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ளன. அந்த வகையிலே மாணிக்கவாசகப் பெருமான் தொடக்கி வைத்த திருவாசக முற்றோதல் மரபினை இன்றைய தலைமுறையிலே பேணி வருகின்ற மாமனிதர்களுள் ஒருவரே எங்கள் இறைபணிச் செம்மல் தேவராசா ஐயா. இனிய திருமுறை முற்றோதுபவராக திகழ்கின்றவர், இவர் தம் திருமுறைகள் கேட்போரை மெய்மறக்க செய்வன. திருமுறைகளிலே தோய்ந்த நெஞ்சினராய் விளங்குபவர். செந்தமிழ் மாண்பினை சைவத்தின் திறனை இவர் எடுத்துக் கூறும் போது எல்லோர்க்கும் ஒரு பெருமித உணர்வு தோன்றும் அத்திறமைகள் காரணமாக பல பட்டங்களும் பெற்றவர்.

இந்தவகையிலே எங்கள் தவப்பயனாய் பண்பாட்டு மேம்பாட்டுக்கான அருள் விசையாய் விளங்கும் இறைபணிச் செம்மல் தேவராசா ஐயா அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் நோய்நொடிகள் இன்றி ஈழத்தின் தமிழ்ப் பண்பாட்டுடன் பயணிக்க வேண்டும் என எல்லாம்வல்ல வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**கு.ஜெயராணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாசபையின்
கௌரவ செயலாளர்
**திரு.க.ந.பாலச்சந்திரன்**
அவர்களின்

# வாழ்த்துரை

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப் படும்.** (குறள் 116)

இவர் தகுதி வாய்ந்தவர், இவர் தகுதியற்றவர் என்பது அவரவர்க்குப்பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும் என்பது இக்குறளுக்கு பொருத்தமான கருத்தாகும்.இந்தவகையில் இறைபணிச்செம்மல் வை.செ.தேவராசா அவர்கள் தனது தொண்டினால் புகழ்பெற்று தக்கவராக எம்மத்தியில் வாழ்கின்றார்.

55 ஆண்டுகளுக்கு மேல் வவுனியா மண்ணில் வாழ்க்கையைப் பயனுடையதாக்கிக் கொண்ட இவர். வவுனியா மண்ணின் சகல வகையான முன்னேற்றங்களுக்கும் பங்குதாரராக விளங்கியிருக்கிறார். எனது தந்தையாரின் காலத்தில் அவரோடு நட்புறவு கொண்டிருந்த இவர் என்மேல் மிகுந்த அன்பு கொண்டவராக வாழ்ந்து வருகிறார்.

எமது கந்தசுவாமி கோவிலின் வளர்ச்சியில் இவருக்கும் பெரும் பங்கு உண்டு. இக்கோவிலுக்கு ஒரு பொதுச்சபை உருவாக்கப்பட்டு பொதுக் கோவிலாக மாற்றப்படவேண்டுமென்பதில் அதிக அக்கறை காட்டி வெற்றி பெற்று, பின் ஒரு தர்மகர்த்தா சபையை அமைப்பித்து அதன் கௌரவ செயலாளராகவும் பணியாற்றியவர்.

எமது கந்தசுவாமி கோவிலோடு நெடுங்கால தொடர்பு கொண்ட இவர் திருவாசக முற்றோதல்கள், புராண படனம் ஆகியவற்றை முன்னின்று நடாத்தியும் பங்குகொண்டும் சிறப்பித்து வருகின்றார். பன்னிருதிருமுறை முற்றோதல் சிறப்பு விழாக்களை இந்து மாமன்றத்தின் மூலம் எமது கோவிலில் ஆண்டு தோறும் நடாத்தி சைவசமய வளர்ச்சிக்கு அரும் தொண்டாற்றியுள்ளார்.

எமக்கு அவ்வப்போது பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கி எமது ஆலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் இவருக்கு 80 வயது தொடங்குவதை நினைத்து மகிழ்ச்சியும் வியப்பும் எய்துகிறேன்.


இன்றும் இளைஞனாக செயற்படுமிவர் இன்னும் நீண்டகாலம் உடல்உள ஆரோக்கியத்துடன் வாழ்ந்து இறைபணி செய்து அமுத விழா மட்டுமன்றி நூற்றாண்டு விழாவையும் காண முருகப்பெருமான் அருள்வேண்டி வாழ்த்துகிறேன்.

நன்றி

**க.ந.பாலச்சந்திரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திரு.இ.கிருபாமூர்த்தி

பரிபாலன சபைத் தலைவர்
குருமன்காடு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானம்.
அவர்களின்

# வாழ்த்துரை

வவுனியா நகரில் சிறுபராயம் முதல் வாழ்ந்து தன் சுயதொழிலுடன் ஆன்மீக தொண்டிலும் தன்னை இணைத்துக் கொண்டு இன்றும் இளைஞனாக நின்று பணியாற்றி மகிழும் பெரியவர் சிவத்திரு.வை.செ.தேவராசா அவர்கள். அவரது பணியைப் போற்றி நடைபெறும் இப்பெருவிழாவில் வாழ்த்துச்செய்தி தருவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

தன் பணியின் சிறப்பால் **திருவாசக தேவராசா** என்றும், **இறைபணிச்செம்மல்** என்றும், **கலாபூஷணம், சிவத்தொண்டன், சைவசிரோமணி** என்றும் பல பட்டங்கள் பெற்ற ஆன்மீகவாதியாக, சைவப்பழமாக எந்நேரமும் இறைபணி புரிந்து மகிழும் ஒருவராக இவரை காண்கின்றோம்.

இலங்கை மண்ணில் மட்டுமல்ல தேசம் கடந்தும் தேவராசா அண்ணனின் குரல் பிரபலம் பெற்றது நாமறிவோம். திருவாசகத்தை தேனாக இனிக்க பாடும் வல்லமை பெற்றவர். திருமுறை ஓதுதலை தன் வாழ்நாள் கடமையாக செய்து வருகின்றவர். திருக்கேதீஸ்வர திருப்பணியில் தன்னை ஈடுபடுத்தி தன் பணியை முழுமையாக கொடுத்துக் கொண்டிருப்பவர். திரு.வை.செ.தேவராசா அவர்களது காலத்தில் பல ஆன்மீகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு சைவ உலகம் பயனடைவதை காண்கின்றோம்.

அள்ளிக்கொடுத்து அறப்பணி புரிகின்றவராக, அரவணைத்து மற்றவர்களையும் தன்பணியோடு இணைத்துச் செல்பவராக, அறிவுரை கூறி வழி நடத்துபவராக, சைவத்தமிழுக்கு பங்கம் வரும் போது முன்னின்று போராடும் போராளியாக இன்றைய சமூகம் அறியாத புரியாத பல விடயங்களை புரிய வைக்கும் வழிகாட்டியாக அண்ணன் தேவராசா அவர்களை காண்கின்றோம்.

இன்னும் பல தசாப்தங்கள் அவர் தன் பணியைத் தொடர இறையருளும் குருவருளும் துணை நின்று வழி நடத்த வேண்டுகின்றோம். அவர் நீளாயுள் நிறை செல்வம் உயர்புகழ் மெய்ஞானம் பெற்றிட வாழ்த்துகின்றோம். தேவராசா அண்ணன் அவர்களின் வாழ்வு நிலைத்து வரும் சந்ததிக்கு வழிகாட்ட வேண்டி வாழ்த்து விழா சிறப்புறவும் வாழ்த்துகின்றோம். விழா ஏற்பாட்டாளர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.


"வாழ்க வளமுடன்"

இ.கிருபாமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு. பொன்னையா நல்லையா

வவுனியா வெளிவட்டவீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய பரிபாலன சபைத்தலைவர்
அவர்களின்

# வாழ்த்துரை

வவுனியா நகரிலே பிரபல்யமான ஆன்மீகத் தொண்டராகச் சிறந்து விளங்கும் **இறைபணிச் செம்மல் திருவாசகச் செல்வர் கலாபூஷணம்** திரு. வை. செ. தேவராசா அவர்கள் எனக்கு நெருங்கிய நண்பராவார்.

முதன் முதலாக வவுனியா வெளிவட்டவீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் 1987ம் ஆண்டு மஹோற்சவ நிகழ்வில் திருமுறைகள் பாடி எனக்கு அறிமுகம் ஆனார். தொடர்ந்து அவ்வருடம் நடைபெற்ற திருவாசகம் முற்றோதலின் போது பங்கு கொண்டு திருப்படையாட்சி என்ற பதிகத்தை தவில் வாத்தியத்துடன் மிகவும் இனிமையாகப் பாடிய போது அங்கிருந்தவர்கள் அனைவரும் மெய்மறந்து ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த காட்சி இப்பொழுதும் என் மனதில் நிலைத்து நிற்கின்றது.

தொடர்ந்து வருடாவருடம் நடைபெறுகின்ற மஹோற்சவ விழாக்களிலும் திருவாசக முற்றோதல் நிகழ்விலும் திருமுறைகளைப்பாடி சிறப்பித்து வருகின்றார். அதுமட்டுமல்லாமல் திருவாசக முற்றோதல் சபையொன்றையும் அங்குரார்ப்பணம் செய்து வருடாவருடம் வருகின்ற மார்கழி மாதத்தில் வவுனியாவில் உள்ள சகல ஆலயங்களிலும் திருவாசக முற்றோதல் நிகழ்வை திறம்பட செயற்படுத்தி வருகின்றார். இதற்கு ஏற்ற முறையில் திருமறைகளை இனிமையாகவும் சந்தத்துடனும் பாடக்கூடிய ஆற்றலை ஆண்டவன் அவருக்கு கொடுத்திருக்கின்றார்.

இப் பெரியார் திருமுறைகள் ஓதுவதில் மட்டுமல்ல புராண படனங்களில் உள்ள பாடல்களை பாடுவதிலும் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர் ஆவார். அந்தவகையிலே எங்கள் ஆலயத்தில் 1992ம் ஆண்டு முதல் கந்தஷஷ்டி விரத நாட்களிலேயும் மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரம் முதல் பங்குனி மாத உத்தர நட்சத்திரம் வரை நடைபெறுகின்ற கந்த புராண படன படிப்பின் போதும் தவறாது கலந்து பாடல்களை மிகவும் தெளிவாகவும் இனிமையாகவும் பாடி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலே புராணத்திற்கு பொருள் சொல்லும் உரையாசிரியர்களும் புராணத்தை கேட்கின்ற அடியார்களும் இவர் பாடுவதை விரும்பி ரசிப்பார்கள்.

இலங்கையில் பிரசித்தி பெற்ற ஆலயமான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திலும் வருடாவருடம் திருமுறையோதல் நிகழ்வை முன்னின்று நடாத்தி வருகின்றார்.

அது மட்டுமன்றி வவுனியாவிலுள்ள இந்துமாமன்றம் முதலான பல ஆன்மீக நிறுவனங்களின் நிர்வாகங்களிலும் பொறுப்பான பதவிகளை வகித்து அவற்றை திறம்பட செயற்படுத்தி வருகின்ற பெருமைக்குரியவர்.

இவருடைய ஆன்மீகத் தொண்டையும் இறை பணியையும் மேலும் பல காலம் தொடர்ந்து முன்னெடுக்க இறைவன் இவருக்கு ஆரோக்கியத்தையும் ஆயுளையும் வழங்க வேண்டும் என்று ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமானை பிரார்த்திப்பதுடன், 80வது அகவை நிறைவு விழா மட்டுமல்லாது 100வது அகவை நிறைவுவிழாவையும் சிறப்பாக கொண்டாடுவதற்கு எனது பிரியமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.


“பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்”

**பொ. நல்லையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு. கனகசபை கந்தசாமி. ச.நீ.

தலைவர்
சித்தி விநாயகர் ஆலயம்
வெளிக்குளம், வவுனியா.
அவர்களின்

# வாழ்த்துரை

**"திருவாசகத்திற்கு உருகாதார்
ஒரு வாசகத்திற்கும் உருகார் "**

மேற்படி முதுமொழிக்கு இணங்க அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அண்ணன் **வை.செ.தேவராசா** அவர்கள் சைவத்துடன் இணைந்த இறை பணி ஆற்றுவது போற்றுதற்குரியதாகும். அவரை நான் பல கோணங்களில் பார்க்கின்றேன். **கண்ணகி** என்னும் பெயரில் பத்திரிகை விற்பனை பகுதியிலும் அத்துடன் **மரத்தளபாட** உற்பத்தியிலும் மேலும் **ஒப்பந்த** துறை அத்தடன் **அரசியல்** பகுதி ஆகியவற்றில் தனக்கென ஓர் பாணியை வகுத்துக் கொண்டவர். மூதறிஞர் எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களிடமும் தமிழ், அரசியலிலும் ஒரு காலத்தில் சிறப்புடன் பங்கெடுத்துக் கொண்டவர். 1977, 1983 யூலை, 1990 யூன் ஆகிய காலப்பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலை எதிர் கொண்டவர்.


எமது வவுனியா மாவட்டத்திலும் அகில இலங்கை முழுவதுமாக திருவாசக பிரச்சாரம், முற்றோதல் ஆகியவற்றில் அயராது ஈடுபட்டு இறை பணியாற்றி வரும் அன்பான அண்ணன் சிறப்புடன் சமயப் பணியாற்ற எல்லாம் வல்ல வெளிக்குளம் சித்தி விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி

**கனகசபை கந்தசாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திரு.இராசா விஜேந்திரநாதன் J.P

புளியடி சித்தி விநாயகர் ஆலய
அறங்காவலர்.
அவர்களின்

# வாழ்த்துரை

இந்து சமுத்திரத்தின் முத்தாகத் திகழும் இலங்கைத் திருநாட்டில் யாழ்ப்பாணத்தில் புனித நாமம் கொண்ட வேலணையில் பிறந்த தேவராசா அண்ணன் அவர்கள் சைவமும் தமிழும் இசையும் தழைத்தோங்கும் உயர் உள்ளம் கொண்ட உத்தமன்.

"உள்ளம் பெருங் கோயில்" என்ற பேரருளாளன். ஊன் உடம்பு ஆலயம். திருவாயால் எண்ணில்லாத ஆலயங்களில் சென்று பன்னிரு திருமுறைகளையும் திருவாசகங்களையும் ஓதிய ஓதுநர். மண்ணவரும், விண்ணவரும் வணங்கி நிற்கும் கயிலைக்குச் சென்று வந்த புண்ணியன். வாழ்நாளை தமிழுக்கும் சைவத்திற்கும் அர்ப்பணித்த பெருந்தகை.

எண்பதாவது வயதில் பெருமை என்னும் புகழ் பூத்து குலுங்கும் தற் பெருங்கருணையின் எல்லையற்ற பேரருளாளன். இன்னும் பல்லாண்டு காலம் இறைபணி செய்து நீடூழி காலம் வாழ புளியடி சித்தி விநாயகரின் திருவருளால் வாழ்க வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றேன்.

**இராசா விஜேந்திரநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சித்தாந்தப் புரவலர், சைவமாமணி
**புலவர் அ.திருநாவுக்கரசு J.P**
அவர்களின்

# வாழ்த்துரை

## பல்லாண்டு மலர்ந்த வாழ்வு பெற வாழ்த்துகின்றேன்

**கலாபூஷணம், திருவாசகச்செல்வர், திருவருள் அருளடியார், சைவசிகாமணி வை.செ.தேவராசா** 80 ஆவது அகவையை எட்டிவிட்டார் என்பதில் அனைவரும் புளகாங்கிதமடைகின்றோம்.

சைவசிகாமணி அவர்கள் அகவாழ்விலும் ஆன்மீகத் தொண்டிலும் தோன்றாத் துணைநிற்பவர்.

அன்றறிவாம் என்னாது அறஞ் செய்வதில் வல்லவர், நல்லவர் என்பதில் கிஞ்சித்தும் தவறற்றவர். வர்த்தகத் துறையிலும் ஏனைய பணிகளிலும் கொடிகட்டியவர். **கண்ணகி** என்றால் தேவராசாவேயே குறிக்கும் புகழ் சேர்ந்தவர். புகழுடன் வாழ்ந்து காட்டியவர். வாழ்கின்றவர் என்றால் மிகையன்று.

தொடர்ந்து பல்லாண்டுகள் வாழ வேண்டுமென்ற அவாவுடன் எல்லாம்வல்ல கௌரி உடனுறை கேதீச்சரப் பெருமானின் இணையடிகளை வழுத்துகின்றோம்.

அன்பர் செய்த அறப்பணிகள் சொல்லிலடங்கா. அத்துணை பணிகளை ஆற்றியுள்ளார். ஆற்றி வருகின்றார்.

இந்துமாமன்றத்தின் தலைவராகவும் (வவுனியா), மணிவாசகர் சபைத் தலைவராகவும் பணியாற்றி அவற்றை அலங்கரிக்கின்றார். இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இப்பணிகளை நினைவுகூர்ந்து பல மன்றங்கள், சபைகள் பெருமைப்படுத்தி பல விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபணிச்செம்மல், திருவாசகக்கலாநிதி, பெரியபுராணமாமனிதர் (திருக்கேதீச்சரம்), கலாபூஷணம்(அரசு) இவ்விருதுகளை வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளமை போற்றத்தக்கது.

பன்னிரு திருமுறையையும், திருவாசக முற்றோதலையும் உளம் தளராது அலுப்புச் சலிப்பின்றி திங்கள் (மாதம்) கணக்கில் ஓதி உணரவைப்பவர். பெரியாரின் பணிகள் தொடர்ந்து பெருகிட, சிறந்திட எல்லாம்வல்ல கேதீச்சரப் பெருமானின் தாமரை இணையடிகளை வழுத்துகின்றோம்.


நன்றி

**புலவர் அ.திருநாவுக்கரசு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வவுனியா தமிழ்ச்சங்கத்தின் நிறுவுனர்

**தமிழருவி த.சிவகுமாரன்**

அவர்களின்

# வாழ்த்துரை

இறைபணிச்செம்மல் வை.செ.தேவராசா அவர்களின் எண்பதாவது வயது தொடக்கத்திலிடம்பெறும் **அமுதவிழா**வையொட்டி என் மகிழ்ச்சியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமய, சமூகப் பணியாளர்கள் காலங்காலமாக போற்றப்பட்டு வருவது கண்கூடு. அது அவர்களுக்கு மட்டுமன்றி அவர்களுக்கு பின்வரும் தலைமுறையினருக்கும் ஒரு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து சமய, சமூகப்பணிகள் புரியத்தூண்டும். அந்தவகையிலும் இவரது **அமுதவிழா** முக்கியத்துவம் பெறுகிறது.

1995ன் பிற்பகுதியிலிருந்து வை.செ.தேவராசா ஐயா அவர்களை நான் அறிவேன். நான் சொற்பொழிவாற்றும் ஆலயங்களுக்கெல்லாம் இவர் மோட்டார் சைக்கிளிலும், **சிவநெறிப்புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி** அவர்கள் தனது சைக்கிளிலும் தவறாமல் வருகைதந்து கேட்டு ரசித்த காலத்திலிருந்து எங்கள் அறிமுகம் தொடங்கியது.

திருமுறைகளை இசையோடு பாடுவது இவருக்கு இயல்பாக கைவந்த ஒன்று. அதுவே இவரை சமயப்பணிக்குத் தூண்டியது எனலாம். திருவாசகத்தை ஆயிரம் தடவைகளுக்கு மேலும், திருமுறைகளை பலநூறு தடவைகளும் தானும், இன்னும் பலருடன் சேர்ந்தும் முற்றோதல் செய்துள்ளார். திருவாசகத்தை 500வது தடவையாக முற்றோதல் செய்த நிறைவு விழா எனது தலைமையில் சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது.


பலரது இக, பர செளஜன்யங்களைத் தரும் தனிப்பட்ட நிகழ்ச்சிகளிலும் இவர் முன்னின்று திருமுறைகளை ஓதி அந்நிகழ்ச்சிகளைச் சிறப்பிப்பார். வவுனியா இந்துமாமன்றம், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா கந்தசுவாமி கோவில் என பல நிறுவனங்கள் இம்மண்ணில் செழித்தோங்க முக்கிய காரணகர்த்தாவாக விளங்கியவர் இவர்.

யாழ்ப்பாணம், வேலணையில் பிறந்து வளர்ந்து, வவுனியாவில் வந்து வாழ்ந்து வவுனியாவும், வவுனியா மாவட்டமும் பல வழிகளில் சிறந்தோங்க வழிசமைத்த பலரில் இவரது இடமும் தனிச்சிறப்பு வாய்ந்தது என்றால் மிகையில்லை. இவரது சமய சமூகப்பணிக்காக பல விருதுகளைப் பெற்ற ஐயா அவர்கள் இன்னும் பலகாலம் வாழ்ந்து இனிய பணியாற்றி இம்மண்ணை மகிமைப்படுத்துமாறு மனமார வாழ்த்துகின்றேன்.

**தமிழருவி த.சிவகுமாரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

## லயன்.T.K.இராஜலிங்கம் J.P

தலைவர்
வர்த்தக சங்கம் - வவுனியா.
அவர்களின்

# வாழ்த்துரை

## 80 அகவையைக் காணும் எனது முதலாளி இறைபணிச்செம்மல் வை.செ.தேவராசா J.P அவர்கட்கு எனது நல்வாழ்த்துக்கள்

நான் இறைபணிச் செம்மல் தேவராசா ஐயா அவர்களுடன் பழகிய காலங்கள் 50 வருடங்களுக்கு மேலானது. நான் 1965ம் ஆண்டு வவுனியாவிற்கு வந்து தொழில் தேடிய பொழுது செட்டிகுளத்தில் இருந்த என்னை ராஜன்ஸ் புடைவை கடையில் கடமையாற்றிக் கொண்டிருந்த எனது தாய் மாமன் திரு.முத்துலிங்கம் அவர்கள் வரும்படி கூப்பிட்டு, தான் கடமையாற்றிக் கொண்டிருந்த புடைவை கடையின் உரிமையாளரிடம் என்னை அறிமுகப்படுத்தினார்.

அதனடிப்படையில் எனக்கு முதன் முதலில் தொழில் அளித்த பெரியார் கரம்பனை பிறப்பிடமாக கொண்டவரும் முன்னாள் ராஜன்ஸ் புடைவைக் கடை உரிமையாளருமான காலஞ்சென்ற திரு.மரியநாயகம் ஐயா அவர்கள்.

அவரின் புடைவை கடையில் பத்திரிகை விநியோக ஊழியனாகச் சேர்ந்தேன். அவரின் கடையில் கடமையாற்றும் பொழுது அவருக்காக சுத்தானந்தபவன் சாப்பாட்டுக்கடையை நடாத்திக் கொண்டிருந்த கொக்குவில்லை சேர்ந்த திரு.சதாசிவம் ஐயா அவர்களிடம் இருந்து என்னால் பொறுப்பேற்கப்பட்டது. சில காலங்களில் சிறு கருத்து வேறுபாடு காரணமாக அவர்கள் இடமிருந்து நான் வெளியேறி வீதியில் வருகின்ற போது கண்ணகி ஸ்ரோஸ் கடைக்குச் சென்றேன்.

அங்கு உரையாடிக் கொண்டிருந்த போது கண்ணகி முகாமையாளர் திரு.உமா அண்ணர் என்னிடம் கேட்டார் எமது கடைக்கு வேலைக்கு வரமுடியுமா என்று. நான் தெருவில் நிற்கின்றேன். அவர் வேலை வேணுமா என்று கேட்டார். நான் ஆம் என்றேன். நாளை காலையில் கடைக்கு வரும்படி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உடன்பட்டு அடுத்தநாள் **கண்ணகி ஸ்ரோஸ்** இல் பத்திரிகை விநியோக ஊழியராக சேர்ந்தேன். அத்துடன் அவரின் **மரக்காலையிலும், யானைசோடா** விநியோகத்திலும் கடமை ஆற்றினேன். இது 1966 இல் நடந்தது. அடுத்த நாள் உமா அண்ணர் அவர்கள் சொன்னார்கள் முதலாளி சுவீப்டிக்கற் வாங்க கொழும்பு சென்றுள்ளார். நாளை வருவார் வந்து சம்பளம் பேசுவோம் என்றார். அதன்படி கண்ணகி முதலாளி அவர்கள் வந்தார். அப்பொழுதுதான் எனக்குத் தெரியும் இவர்தான் முதலாளி என்று. அவர் எனக்கு மாதம் 60/= ரூபா சம்பளம், சாப்பாடு வீட்டில் என பேசி முடிவாகியது. அவரிடம் நான் வேலைக்குச் சேர்ந்ததை மிகப் பெரிய பாக்கியமாகக் கருதுகின்றேன்.

என்னை முதலாளி ஆக்கி பெருமை சேர்த்து தந்தவர் இவர். 1967ம் ஆண்டு இவர் கண்ணகி ஸ்ரோர்ஸை மாதம் ரூபா 600/= க்கு கொமிசனுக்கு என்னிடம் தந்தார். அன்று நான் முதலாளி ஆகினேன். 1968ல் கண்ணகி விலாசம் தரமாட்டேன். கடையை தருகின்றேன் என்று ரூபா 8000/= இற்கு கடையை தந்தார். நாங்கள் 1968ல் வளர்மதி ஸ்ரோர்ஸ் என பெயர் வைத்து கடையை நடத்தினோம். இவை அனைத்தும் எமக்கு அவரால் வழங்கப்பட்ட முகவரி.

80ஆவது பிறந்தநாள் காணும் கொடைவள்ளல் திரு.தேவராசா ஐயா அவர்கள் இலங்கைத் தமிழ் அரசு கட்சியில் தலைவர்கள் பலரோடு சகோதரர் போல் பழகினார். அந்தவகையில் கண்ணகி ஸ்ரோர்ஸில் தங்கியவர்களில் **திரு.செல்லையா, இராஜதுரை ஐயா, திரு.ஆலாலசுந்தரம் ஐயா, திரு.காசிஆனந்தன் ஐயா, தீப்பொறி ஆசிரியர் திரு.ம.க.அந்தனிசில் ஐயா** மற்றும் பல பிரமுகர்கள் உடன் பெரும் நட்புடன் இருந்தார்.

வடமாகாணத்தில் கண்ணகி முதலாளி என்றால் தெரியாதவர்கள் இல்லை. அந்த அளவிற்கு அவர் மக்களோடு பழகினார். கோயில்களில் தேவாரம் என்றால் உடனே தேவராசா என்றுதான் சொல்லுவார்கள். அதுமட்டுமல்ல எங்கு சரி பெரியகாரியம் (செத்தவீடு) நடந்தால் அங்கு தேவாரம் பாடிக்கொண்டு இருப்பார். அப்படிப்பட்ட சமூகத் தொணடர்.

ஒரு காலத்தில் பசார் வீதியில் இரண்டு பக்கமும் தார் ரோட்டில் கிடங்கு கிண்டி இலங்கை தமிழரசு கட்சியின் கொடிக் கம்பங்களை நாட்டியவர். தந்தை செல்வாவில் அடங்கா பற்றுக் கொண்டவர். தந்தை செல்வாவின் பிறந்தநாள் விழாவை வவுனியா நகரசபை மைதானத்தில் வெகுவிமர்சையாக நடாத்தி பெருமை சேர்த்தவர்.

இவர் மிகப்பெரிய தொண்டுகள் செய்தவர். பல மாணவர்கட்கு பாடசாலை உபகரணங்களை வழங்குவதை இன்றுவரை நான் பார்க்கின்றேன். **கண்ணகி ஸ்ரோர்ஸ், கண்ணகி மரக்காலை, கண்ணகி யானை சோடா, கண்ணகி கட்டிட ஒப்பந்தக்காரர், கண்ணகி சீமெந்து விநியோகம்** என, பல தொழில்களைச் செய்தது மட்டுமல்லாமல் பலருக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கிய பெருமகனார். சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வவுனியா கந்தசாமி கோவில், இந்து மாமன்றம், மணிவாசகர் சபை, வவுனியா வர்த்தகர் சங்கம், எம்.ஜி.ஆர் நற்பணிமன்றம் எனப் பல சமய சமூக அமைப்புக்களோடு இணைந்து சமூகத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பை செலுத்தியதுடன் திறம்பட நடாத்தினார்.

இவரின் தொண்டு மக்களுக்கும் இறைவனுக்கும் தேவை. எனவே இறைவா இவருக்கு பல ஆண்டுகள் சீரோடும் சிறப்போடும் வாழ அருள் புரிந்து 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ வை என வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
தங்களின் ஊழியர்
**லயன்.T.K.இராஜலிங்கம்** J.P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு.ஆ.இராஜேந்திரன். J.P
(உரிமையாளர் வெங்கடேஸ்வரா சுப்பர் மார்க்கட்)
அவர்களின்

# வாழ்த்துரை

**அமுத விழா** காணும் அன்பர் கண்ணகி தேவராசா அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் அகநிறை பெருமகிழ்வுறுகின்றேன். இவர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கு அமைய வாழ்ந்து காட்டி நம் எல்லோரினதும் உள்ளத்தை வென்ற பாக்கியசாலியாவார்.

**கண்ணகி** என்றால் அது தேவராசாதான். காலத்தின் தேவையினால் பள்ளிப்படிப்பை பூரணமாக நிறைவு செய்யும் எண்ணம் கனவாகி விட்டதனால் வாணிகப் படிப்பை அனுபவத்தில் பெற்று வன்னி போற்றும் மகத்தான வாணிபனாக வாழ்ந்துவருபவர். பல்வேறு கஷ்ட நஷ்ட சூழ்நிலையிலும், எதிர்பாராத தடைகள். சவால்களுக்கு மத்தியிலும் துணிந்து சமுதாயத்திற்கு நலனும் பலனும் பயக்கக் கூடிய வகையில் முயன்றுழைக்கும் உள உறுதிப்பாட்டை திரு. கண்ணகி தேவராசா அவர்களிடம் காணக்கூடியதாகவுள்ளது.

எளிமையான உடை, நடை, பார்ப்பதற்கு சிறியவர் போல் தோன்றினாலும் பண்பால் உயர்ந்தவர் "பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய - சுருக்கத்து வேண்டும் உயர்வு" என்ற வள்ளுவனின் வாக்கிற்கு வணிகர்கள் மத்தியில் முன்னுதாரணமாக செயறப்பட்டு வந்தவராவார்.

இன்றைய நாகரிக உலக மாற்றத்திற்கு அடிபணிந்து சமுதாயத்தை பார்க்காமல் இலாபம் ஒன்றே போதும் என்ற உணர்வோடு வாழும் பலரிடத்தே மாற்று சிந்தனையோடு சமுதாய பணியோடு ஆன்மீக சமயப்பணியையும் ஆற்றி வருகின்றார்.

"ஒரு மனிதன் பதவி அந்தஸ்து உயர உயர மற்றோரை மதிக்கும் பண்பும், பணிவும் உயர்ந்து செல்ல வேண்டும். அப்பொழுது தான் அந்த மனிதன் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படுவான்". அவ்வாறான ஒரு மனிதன் தான் **கண்ணகி தேவராசா** ஆவார்.


இவர் இன்னும் பல எண்பது ஆண்டுகள் வாழ உடல் நலம், நீள் ஆயுள், நிறைவான செல்வம் உயர்புகழ், மெய்ஞானம் பெற்று வாழ வாழ்க வளமுடன் என வாழ்த்துகிறேன்.

"வாழ்க வளமுடன்"

**ஆ.இராஜேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அருட்கலைவாரிதி, கலாபூசணம்
**ஸ்தபதி சு.சண்முகவடிவேல்**
அவர்களின்

# வாழ்த்துரை

அகவை எண்பதில் அடியெடுத்து வைக்கும் **சிவனருட் செல்வர்** வை.செ.தேவராசா அவர்கள் என்றும் போற்றுதலுக்குரியவர். பாராட்டுக்குரியவர்.

அகவை எண்பதுஇறைவன் அளித்த கொடையாகும். அதிலும் நோயில்லா உடலும், துன்பமில்லா வாழ்வும் வாய்க்கப்பெறுவது பூர்வ புண்ணியமாகும்.

இவ்வகையில் இவ் வாழ்வினை முழுமையாகப் பெற்றவர் இறை தொண்டர் தேவராசா ஆவார். இவரின் வாழ்வும் சமயப் பணிகளும் எல்லோருக்கும் முன்னுதாரணமாகும்.

இலங்கையில் உள்ள பெரும்பாலான ஆலங்களில் திருமுறை முற்றோதல், திருவாச முற்றோதல் செய்துள்ளார். செய்து வருகிறார். இந்தியாவில் காசி, கைலாயம் என புனித யாத்திரை சென்றுள்ளார். கங்கையிலே நீராடியதுடன் புனித தீர்த்தத்தை இலங்கைக்கு கொண்டு வந்து எல்லோருக்கும் தந்தள்ளார்.

தேவராசா அவர்களின் சமய, சமூகப் பணிகளைப் பாராட்டி இந்து சமய கலாசார திணைக்களம் பட்டமளித்து கௌரவித்துள்ளது. பல மன்றங்களும் நிறுவனங்களும் அவரது சேவையை தொண்டைமெச்சி பொன்னாடை போர்த்தி பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளன.

இவரின் சமய சமூகப் பணிகள் சமூக நோக்குடையன. தன்னலமற்றவை. குறிப்பாக சமயப் பணிகளில் **திருமுறை முற்றோதல், திருவாசக முற்றோதல், பஞ்சபுராணம்** ஓதல் முக்கியமானவை.

பண்ணோடு பாடுவதில் வல்லவர். பொருள் உணர்ந்து தன்னை மறந்து பாடுவார். வேறு ஓதுவார்கள் இல்லாத போதிலும் தனியே இருந்து பாடுவார். கோவில்குளம் சிவன் ஆலயத்திலும், திருக்கேதீஸ்வர ஆலயத்திலும் இவை கண்டு வியந்துள்ளேன். மகிழ்ந்துள்ளேன்.

என்றும் இறைதொண்டும் சமூகச் சிந்தனையும் கொண்டவர் தேவராசா அவர்கள் திருமுறை திருவாச முற்றோதலே மூச்சாக கொண்டு வாழ்பவர்.

இவர் பூரண ஆரோக்கியத்துடன் நூறாண்டு வாழ்க... வாழ்க... என வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**சு.சண்முகவடிவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திரு.கணபதிப்பிள்ளை நவரட்ணம் J.P

குடியிருப்பு, வவுனியா.

அவர்களின்

# வாழ்த்துரை

## 80வது வயது ஆரம்ப நிகழ்வுகள்

**வ**வுனியாவில்50வருடங்களுக்குமேலாகவாழ்ந்துபலஆலயங்களில்தொண்டுகள் செய்தும் திருமுறைகள் பாடியும் திருவாசகத்தை வவுனியா, லண்டன், தமிழ்நாடு, சிங்கபூர், திருக்கைலாயம் போன்ற பல இடங்களிலும் ஏறத்தாழ 1500 தடவைகள் பாடியும் (ஓதுதல்) கலந்து கொண்டு மக்களை பாடவைத்தும் பெருமை சேர்த்த திரு.வை.செ.தேவராசா அவர்களை நீண்ட காலமாக, அதாவது அவர் வவுனியாவுக்கு வந்த காலம் தொடக்கம் மிக நெருங்கிப் பழகியவன் என்பதிலும் அவரோடு சமயம், அரசியல் பொது வாழ்வு என்று தொடர்ந்து பணியாற்றியவன் என்பதிலும் பெரு மகிழ்வு அடைகின்றேன்.

அவரது 80வது வயது ஆரம்பவிழாவுக்கான வாழ்த்துரை வழங்குவதில் பெருமையடைகின்றேன். அவர் குடியிருப்பு விநாயகர்ஆலயத்தில் பல ஆயிரக்கணக்கான ரூபா திருப்பணி வேலைகளை செய்து தந்ததை நினைவு கூருகின்றேன். அவர் தந்தை செல்வாவின் வழியில் ஏராளமான சேவைகள் புரிந்து உள்ளது எனக்கு நன்றாக தெரியும்.

இவரது 80வது பிறந்த நாள் ஆரம்ப விழாவுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் அன்புடன் வழங்கி வாழ்த்துகின்றேன்.

அவர் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து சமயத்துக்கும் சமூகத்திற்கும் சேவை செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**கணபதிப்பிள்ளை நவரட்ணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கலாபூஷணம், பண்டிதை
## யோகலட்சுமி சோமசுந்தரம்
அவர்களின்
# வாழ்த்துரை

**"இறைபணிச் செம்மல்"** என்று எல்லோராலும் போற்றப்படும் திரு. வை. செ. தேவராசா அவர்கள் இன்று தமது எண்பதாவது அகவையை நோக்கி காலடி எடுத்து வைக்கிறார். அவர் எல்லா நலன்களும் பெற்று பல்லாண்டு, பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

**"திருவாசகச் செல்வர்", "திருவாசக கலாநிதி", "வாதவூரனின் பாதசேகரன்", ஈழத்தின் சிவத்தொண்டன்"** என்ற கௌரவ விருதுகளும், **"கலாபூஷணம்"** என்ற அரச விருதும் இந்நாள் வரை அவர் தமதாக்கிக் கொண்ட உரிமைப்பட்டயங்கள்.

சமயப்பற்றும், ஆன்மீக நாட்டமும், நல்லகுரல் வளமும் வாய்க்கப்பெற்ற இவர் சிறு வயது முதல் ஆலயங்கள் தோறும் சென்று தேவாரத் திருவாசகங்களை மனம் நெதிழ்ந்து உருகிப் பாடுவார். மொழியோடு இசை சேர்த்து வழிபட சித்தம் மேன்மை பெறும், சிந்தை தூய்மையுறும்.

இயல்பாகவே பன்னிரு திருமுறைகளில் நாட்டங்கொண்ட இவர் வருடந்தோறும் திருக்கேதீச்சரத்தில் பன்னிரு திருமுறைகளையும் தனி ஒருவராக நின்று பாடி முடித்தார். அதன் விளைவு சிவனை நினைத்து மணிவாசகர் உருகி உருகிப் பாடிய பாடல்களின் உருக்கம் இவரை ஈர்த்தது. திருவாசகத்திற்கு அடிமையானார்.

வவுனியாவில் பட்டி தொட்டிகள் எங்கும் சென்று மக்களையும் தம்மோடு இணைத்து **"திருவாசக முற்றோதல்"** நிகழ்த்தி சைவ சமய எழுச்சியை ஏற்படுத்தினார். தமிழ்நாட்டிலுள்ள சிதம்பரத்திலும், இலண்டன் மாநகரிலும் சென்று **"திருவாசக முற்றோதல்"** நிகழ்த்தியமை பாராட்டுக்குரியது. இன்று வரை 1500 வரையான **"திருவாசக முற்றோதல்"** நிகழ்த்தியது பெருமைக்குரியது.

அயராத முயற்சியும், சமயத்தின் மீது கொண்ட தணியாத பற்றும், எதையும் செய்து முடிக்க வேண்டும் என்ற வேணவாவும் இவரை இப்பணியில் ஈடுபடுத்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்த முகம், அமைதியான சுபாவம், இனிமையான பிறரைப் புண்படுத்தாத பேச்சு, எளிமை, தன்னடக்கம், எல்லோரையும் நேசிக்கும் இனிய சுபாவம் இவரது குணநலன்கள். வீபூதி, உருத்திராக்கம் இவரது அடையாளங்கள்.

மணிவாசகர் சபை, இந்துமாமன்றம் ஆகியவற்றின் தலைவர். சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், அகிலாண்டேஸ்வரர் ஆலயம் ஆகியவற்றின் வளர்ச்சியில் பெரும் பங்குதாரர்.

இறைபணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட இவர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரரின் அருட்கடாட்சம் பெற்று எல்லா நலன்களும், வளங்களும் பெற்று, பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து மென்மேலும் தொண்டுகளைச் சிறப்புறச் செய்வதற்கு ஆண்டவன் உடல் நலத்தையும், சுறுசுறுப்பையும் வழங்க வேண்டுமென இந் நன்னாளில் வாழ்த்துகின்றேன்.


"வாழ்க இறைபணிச் செம்மல்"

அன்புடன்
கலாபூஷணம், பண்டிதை
**யோகலட்சுமி சோமசுந்தரம்**

இல. 30/2 10வது ஒழுங்கை
வைரவபுளியங்குளம்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு.வினாசித்தம்பி முத்துராசா

செயலாளர் இந்துமாமன்றம், வவுனியா.
அவர்களின்

# வாழ்த்துரை

## திரு.வை.செ.தேவராசா அவர்களுக்கோர் அமுதவிழா

திரு. வைத்தியலிங்கம் செல்லத்துரை தேவராசா வயது - 79 தொழில் வியாபாரம் இல. 59, வைரவகோவில் வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா என்னும் விலாசத்தில் குடும்பத்துடன் நிரந்தரமாக வசித்து வருகின்றார். இவருடைய **அமுதவிழா**வுக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் யாழ்ப்பாணம் வேலணை என்னும் இடத்தை சொந்த இடமாகக் கொண்டவர். இவரை **கண்ணகி தேவராசா** என்று எல்லோரும் செல்லமாக அழைப்பார்கள். இவர் வவுனியாவில் உள்ள அனைத்துக் கோவில்களிலும் நடைபெறும் திருவாசக முற்றோதல். பெரியபுராணம், கந்தபுராணப்படனம் ஆகியன படித்து பயன் சொல்பவர்.

அதுமட்டுமல்லாமல் கோவில்களுக்கு தினமும் சென்று தேவாரபாராயணம் கிரமமாக பண்ணிசையோடு பாடுபவர். இன்னும் திருக்கேதீச்சரம் சிவன் கோவிலில் நடைபெறும் விசேட தினங்களுக்குச் சென்று தேவாரபாராயணம் செய்பவர்.

இவர் தற்பொழுது வவுனியா இந்துமாமன்றத்தின் தலைவராக இருந்து வருகின்றார். இதுமட்டுமல்லாமல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் தேவஸ்தானம் ஆகியவற்றிலும் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இருந்து இந்து சமய முன்னேற்றத்துக்கு பாடுபட்டவர். இதனால் தான் இவருக்கு **இறைபணிச் செம்மல்** என்ற பட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

மற்றும் இவர் ஆரம்பகாலம் தொடக்கம் தமிழர்களின் உரிமைக்காக தமிழரசுக்கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு அயராது பாடுபட்டவர். இப்படி தமிழுக்கும் இந்துசமயத்துக்கும் தன்னாலான அளப்பெரிய பங்களிப்பைச் செய்து தனது எண்பதாவது வயதில் கால் பதித்துள்ளார். இவ்வேளையில் இவரும் இவருடைய குடும்பத்தினரும் இறையருளால் நீண்ட ஆயுளுடன் மேலும் பல பேறுகளும் சிறப்புக்களும் பெற்று நீடுழி காலம் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றேன்.

"சுபம்"

**வினாசித்தம்பி முத்துராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# LION. கு.கங்கைவேணியன் J.P

அமைப்பாளர் பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு அமைப்பு
மனித உரிமைகள் ஆணைக்குழு (கொழும்பு மாவட்டம்)
அவர்களின்

# வாழ்த்துரை

80 அகவையைத் தரிசிக்கும் அன்புக்கும் பண்பிற்கும் சைவத்திற்கும் முதன்மை கொடுக்கும் பெரிய ஆசானாக துலங்கும் தேவராசா ஐயாவை வாழ்த்துவதற்கு அடியேனுக்கு என்ன தகுதி உண்டோ என்பதை இறைவன் தான் அறிவான். அப்படி இருந்தும் பெரிய மகானுடன் 36 வருடங்களுக்கு முன்பாக அவருடன் பழகும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. சுருங்கக் கூறின் வவுனியாவை தரிசிப்பதற்கும் அங்கு வணிகம் செய்வதற்கும் முதல் அடி எடுத்துக் கொடுத்த பெரும் வள்ளல்.

எண்பதுகளிலே அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் அவரிடம் குடி கொண்ட சுறுசுறுப்பு, எடுத்த காரியத்தை துணிவாக முடித்து வைத்தல். எல்லோருக்கும் உதவி செய்தல் போன்ற நற்பண்புகளை அடியேன் அவரிடம் கண்டேன். தற்போதைய காலங்களில் அவருக்கும் இறைவனுக்கும் இருக்கும் தொடர்பு மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர் போன்ற சுவாமிகளின் வழி நின்று இறைவனை அடைவதற்கு பெரும் மகா பாக்கியசாலியாக திகழ்கின்றார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆலயங்களாக சென்று **"திருவாசகம் எனும் தேனை"** முற்றிலும் ஓதி தானும் மற்றும் அடியார்களையும் எல்லாம் வல்ல சிவனிடம் அழைத்து செல்கின்ற பெரும் பேறு பெற்றவர். இது மட்டுமல்ல திருநாவுக்கரச நாயனார் எவ்வாறு கைலாசக் காட்சியைக் கண்டாரோ அதே மாதிரி இவரும் விட்டு விடவில்லை. எடுத்த கைங் காரியத்தை விடாப்பிடியாக நின்று ஒன்றல்ல, இரண்டல்ல மூன்று தடவைகளாக சென்று அகிலாண்டேசுவரருடைய மகா பாக்கியத்தை பெற்று கைலாசத்தை அவருடைய மானிட வாழ்வில் தரிசிக்கும் ஈடில்லா பேரின்பத்தை கண்டு கொண்டார்.

அவருக்கு வாழ்க்கையில் கிடைக்க வேண்டியவை அனைத்தும் இறைவன் கொடுத்தருளியுள்ளார். அவர் மேன் மேலும் சிவதரிசனங்கள் செய்தும், திருமுறைகளை ஒவ்வோர் ஆலயங்களாக ஓதியும், உருத்திராக்கம், விபூதி போன்ற சிவசின்னங்கள் தரித்தும் எல்லா சிற்றின்பங்களையும் துறந்தவராகவும் திகழ்ந்து எல்லாம் வல்ல எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிறைந்த, ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெரும் ஜோதியை மானிடராகிய நாங்களும் தரிசிக்க முடியும் என்ற மகா மகுட வாக்கியத்தை இவ்வுலகத்திற்கு காட்டிய பெருமகானாக மேன்மேலும் வலுவூட்ட வேண்டும். வளர வேண்டும் என்று வாழ்த்தி வணங்கி அவருடைய பாதார விந்தங்களைப் பணிந்து அமைகின்றேன். நன்றி வணக்கம்.

LION. **கு.கங்கைவேணியன்** JP
அமைப்பாளர் பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு அமைப்பு
மனித உரிமைகள் ஆணைக்குழு
(கொழும்பு மாவட்டம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு.தா.அமிர்தலிங்கம்

அதிபர்
வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி
அவர்களின்

# வாழ்த்துரை

20.07.2017 ல் தனது 80 வயதைக் காணும் திருவாளர் வை.செ.தேவராசா அவர்களை நீண்டகாலமாக நான் அறிவேன். 65 ஆண்டுகளுக்கு மேலாக வவுனியாவில் வாழ்ந்து வரும் இவர் சைவத்திற்கும் தமிழிற்கும் நீண்டகாலமாகப் பணியாற்றி வருகின்றார்.

கிராமங் கிராமமாகச் சென்று அங்குள்ள ஆலயங்களில் தனது திருமுறைப் பாடல்களை இடம்பெறச் செய்து வருபவர். வவுனியாவில் மட்டுமல்ல அயல் நகரங்களிலும் குறிப்பாக மன்னார் திருக்கேதீஸ்வரத் தலத்திலும் நடைபெறும் அனைத்து சமய தமிழ் நிகழ்ச்சிகளிலும் இவரைக் காணலாம்.

இறைபணிச்செம்மல், திருவாசகச் செல்வர், பெரியபுராண மாமனிதர், கலாபூஷணம், ஈழத்தின் சிவத்தொண்டன் போன்ற பல பட்டங்களை தனது பணிகளுக்காகப் பெற்ற இவரை 80வது வயதில் வாழ்த்துவதுடன், விழாமலர் சிறப்புறவும் வாழ்த்துகிறேன்.

**தா.அமிர்தலிங்கம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திருமதி.பா.கமலேஸ்வரி

அதிபர்
வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி
அவர்களின்

# வாழ்த்துரை

உலகெலாமுணர்ந்து ஓதுதற்கரிய சிவனுக்குப் பணிபுரியத் தன் வாழ்வை அர்ப்பணித்துவரும் **இறைபணிச்செம்மல், திருவாசகச்செல்வர், கலாபூசணம், திருவாசகக் கலாநிதி, திரு கண்ணகி தேவராசா** அவர்களின் எண்பதாவது (80) அகவை தொடக்கத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மனம்மிக மகிழ்கிறேன்.


ஐயா! உங்கள் பணி மேலும் சிறக்க வேண்டும் உங்களின் பணி எம் சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும். அனுபவமிக்க உங்கள் சேவைக்காக இன்னும் பல ஆண்டுகள் சுகதேகியாக சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி காலம் வாழ வேண்டுமென உளப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

**திருமதி.பா.கமலேஸ்வரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.எஸ்.வஸ்தியாம்பிள்ளை

அதிபர்
வ/இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலயம்
அவர்களின்

# வாழ்த்துரை

## "பண்புடையார் பட்டுண்டு உலகம்"

"பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்ற வள்ளுவன் வாக்கிற்கு நிதர்சன சாட்சியாக வாழ்பவர் **திருமிகு.வை.செ.தேவராசா** J.P ஆவார். சைவ கலாச்சார நெறிகளோடு நனி சிறந்த தமிழ்ப் பண்பாடுகளுக்கு உரிய வாழ்க்கை வாழ்பவர். சைவத்திரு முறைகளையும், சிறப்பாக திருவாசகத்தையும் தெளிவுறக்கற்று "கேட்டார் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்ப மொழிவதில்" பாண்டித்தியம் மிக்கவர்.

இதன் காரணமாக **திருவாசகச் செல்வர், திருவாசக கலாநிதி,** ஆகிய விருதுப் பட்டங்களை தமதாக்கிக் கொண்ட அறிவாளர் இவர். ஆலயப்பணிகளின் நோக்கமறிந்து உரிய கடைமைகளை ஆற்றுபவர் ஆதலால் **இறைபணிச் செம்மல்** என்று சிறப்பாக போற்றப்படுபவர். இலங்கை அரசாங்கத்தின் **"கலாபூஷணம்"** என்ற சிறப்பு பட்டம் பெற்றவர்.

சமூக நிகழ்வுகளில் உணர்வுபூர்வமாக கலந்துகொள்ளும் வல்லாளராக திகழ்பவர். சுருக்கமாக கூறின் சிறந்த சமய வாழ்க்கையையும் சமுதாய வாழ்க்கையையும் வாழ்ந்து வருபவர். இதற்குரிய பண்புகளையும் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டு திகழும் நற்குணங்கள் நிறைந்த திரு.வை.செ.தேவராசா J.P அவர்கள் தமது எண்பதாவது அகவையில் பிரவேசிக்கும் இத்தருணத்தில் அன்னார் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து இன்னும் பற்பல பணிகளாற்றி சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும் என வாழ்த்துரைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**எஸ்.வஸ்தியாம்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு.வீ.ஜெகசோதிநாதன்

தலைவர்
வவுனியா ப.நோ.கூ.சங்கம் - வவுனியா.
அவர்களின்

# வாழ்த்துரை

**அமுத விழா**க்காணும் இறைபணிச் செம்மல் உயர்திரு.வை.செ.தேவராசா சாமாதான நீதிபதி அவர்களின் அமுத விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பேறாக கருதி மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஐயா அவர்களை கடந்த 35 வருடங்களுக்கு மேலாகா நன்கு அறிவேன். அத்தோடு நெருங்கிய தொடர்பும் உண்டு.

யா/வேலணையில் 20.07.1938ம் ஆண்டில் பிறந்து, யா/வேலணை மத்திய கல்லூரியில் ஆங்கில மொழி மூலமாக Pre.Ssc வரை கல்வி பயின்றவர். வறுமை நிலை காரணமாக தொடர்ந்து கல்வி பயில முடியாமல் 1952ல் வேலை தேடி கொழும்பு சென்று தொழில் செய்தவர்.

1956ம் ஆண்டில் அரசியலில் காலடி வைத்தவர். தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினர். தந்தை செல்வா இவரது குரு. தந்தை செல்வா வழியில் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்.

1960இல், 22 வயது இளைஞராக இருந்தபோது சக்தியாக்கிரகத்தில் பங்குபற்றியவர்.

1960ம் ஆண்டில் வவுனியா மண்ணில் காலடி வைத்தவர். வியாபாரத்தை தனது பிரதான தொழிலாகக் கொண்டிருந்த போதும் அரச ஒப்பந்தகாரராக இருந்து வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் அநேக பாடசாலைக் கட்டடங்களை கட்டியவர்.

ஆங்கில அறிவும், தமிழ் அறிவும் உள்ளவர், தமிழ் இவரது மூச்சு, தமிழும் சைவமும் இவரது இரு கண்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த இறைபக்தர் ஆன இவர், வவுனியா இந்து மாமன்றம் மணிவாசகர் சபை ஆகியவற்றின் கௌரவ தலைவராக செயல்பட்டு தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதோடு தமிழ் மக்களின் கலை, கலாச்சார விழுமியங்களை பேணி பாதுகாத்து வருவது பெருமைக்குரிய விடயம் ஆகும்.

வவுனியா மற்றும் வெளியிடங்களிலும் இலண்டன் போன்ற வெளி நாடுகளிலும்1500 தடவைகளுக்கு மேல் திருவாசக முற்றோதல் செய்து சாதனை படைத்தவர். இவருடைய செயல் திறனையும் முயற்சியையும் பாராட்டி இவருக்கு திருவாசக கலாநிதி, திருமுறைச் செல்வர், திருவாசகமணி, இறைபணிசெல்வர் இவற்றோடு இலங்கை அரசினால் வழங்கப்பெற்ற உயர்விருதான கலாபூஷண விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.

அகவை எண்பதை அடைந்த போதும் இளமைத்துடிப்புடன் செயல்படும் தேவராசா ஐயா அவர்கள் நீண்ட காலம், நோய் நொடியின்றி வாழ்ந்து தமிழையும் சைவத்தையும் வளர்க்க எல்லாம் வல்ல வவுனியா குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை வீழ்ந்து வணங்கி வாழ்த்தி அமைகிறேன்.

வாழ்க நீடுழி


நன்றி

**வீ.ஜெகசோதிநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திரு.வை.சு.தனபாலசிங்கம் J.P

37, பார்க்குழி லேன், தோணிக்கல் வவுனியா.

அவர்களின்

# வாழ்த்துரை

நூங்குமிகு நூலாளன் நூர்த்தல்பல பேராளன்
நூக்குதலான் நன்நோக்கை நுகர்வுடனும் - நூற்பாவில்
நூதனங்கள் சேர நுண்ணறிவால் பாவிசைப்பார்
நூறாண்டு வாழஎந்தன் வாழ்த்து

2002ம் வருடம் தோணிக்கல் அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் திரு.ந.சுதாகரன் அவர்கள் தலைவராகவும், அமரர்.சொ.சாம்பசிவம் அவர்கள் செயலாளராகவும், நான் பொருளாளராகவும் பணியாற்றிய காலம்.

அவ்வேளை மேற்படி தேவஸ்தானத்திற்குப் புதிய யாப்பு வரைவதற்கான பொறுப்பைப் பரிபாலன சபையினரின் வேண்டுதலின் பேரில் நான் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தேன். பல ஆலயங்களின் யாப்புக்களைத் தொகுத்து ஒரு முழுமையான யாப்பைத் தயாரித்திருந்தேன்.

ஆலய விதிமுறைகளை அறிந்த ஒருவரிடம் காட்டி ஆலோசனை பெற வேண்டுமென எண்ணி வவுனியா ஸ்ரீ ஆதி விநாயகர் தேவஸ்தானத் திருப்பணிச் சபைத் தலைவர், திருப்பணிச் செம்மல் உயர்திரு தி.தில்லைநாதன் அவர்களின் வீட்டிற்குச் சென்று யாப்புக் கோவையை அவரிடம் காட்டினேன். வாங்கிப்பார்த்த அவர் யாப்புப் பற்றி ஆலோசனை கூற எனக்கு அவ்வளவு அனுபவம் குறைவு. நீங்கள் கண்ணகி தேவராசா அவர்களைச் சந்தியுங்கள் என்று கூறி அவரது முகவரியையும் தந்தார். **கண்ணகி மரக்காலை இல.24, 1ம் குறுக்குத்தெரு வீதி, வவுனியா** என்னும் வர்த்தக நிலையத்திற்கு நான் சென்ற போது புன்முறுவல் பூத்த முகத்துடன் எழுந்து நின்று கரம் தந்து வரவேற்றார்.

அன்று தான் உயர்திரு. வை.செ.தேவராசா J.P அவர்களை முதன் முதலாக நான் சந்தித்த நன்நாளாகும். எனது வாழ்வில் பல புதுமைகளை முன்னேற்றங்களைத் தோற்றுவித்த நாளுமாகும். நான் கொண்டு சென்ற யாப்புக்கோவையை அவரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினேன். வாங்கிப் படித்துவிட்டுச் சில வரைவுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தம் செய்து வழங்கியிருந்தார். அன்று நான் அவரைச் சந்தித்ததன் ஞாபகார்த்தமாக அவரால் பதிப்பித்து வெளியிடப்பட்ட மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய **"திருவாசகம்"** என்னும் நூலைத் தனது திருவாசக முற்றோதல் 215வது நிகழ்வின் ஞாபகார்த்தமாக வழங்கி வைத்தார். அத்துடன் என்னையும் திருவாசக முற்றோதல் நிகழ்வுகளில் பங்குகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

அன்றைய தினம் எனது வாழ்நாளில் என்றும் மறக்க முடியாத தினமாகும். அன்றுதொட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட திருவாசக முற்றோதல் நிகழ்வுகளிலும் ஆலயங்களில் தேவாரபாராயண நிகழ்வுகளிலும் மற்றும் பல மேடை நிகழ்வுகளிலும் கலந்து கொண்டிருக்கும் என்னை வவுனியாவாழ் மக்களுக்கு அடையாளம் காட்டிய பெருமையும், உயர் திரு.வை.செ.தேவராசா J.P அவர்களையே சாரும்.

ஊர்ப்பற்றும், இனப்பற்றும், மொழிப்பற்றும், ஒருங்கே அமைந்த அன்புள்ளம் கொண்ட இவர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர், ஈழத்துக் காந்தி, தந்தை - சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களின் கொள்கையில் வழிநடத்தலில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவராக விளங்கினார்.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், இந்துமாமன்றம், மணிவாசகர் சபை, போன்ற உயர் மன்றங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடாத்தியதுடன் செயற்திறன் மிக்க தலைவர்களில் ஒருவராகவும் விளங்குகின்றார்.


இறைபணிச் செம்மல், திருவாசகச் செல்வர், கலாபூஷணம் உயர்திரு.வை.செ.தேவராசா J.P அவர்கள் தனது 80வது அகவையில் காலடிவைக்கும் விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் அவர் நூற்றாண்டு காலம் வாழ வேண்டித் தோணிக்கல் அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பாதார விந்தம் பணிந்து வாழ்த்துகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

**வை.சு.தனபாலசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கலாநிதி
**தமிழ்மணி அகளங்கன்**
அவர்களின்
# வாழ்த்துரை

## இறைபணிச் செம்மலின் திருவாசகப் பணி

இறைபணிச்செம்மல் வை.செ.தேவராசா அண்ணர் அவர்களை 1964 இலிருந்து எனக்குத் தெரியும். அப்போது எனக்கு வயது 11. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் (அப்போது வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்) 6ம் ஆண்டில் கல்வி பயில வந்து சேர்ந்தேன். அப்போது பேரூந்து நிலையம், இப்போது தலைவர் சு.வீரசிங்கம் மாளிகை இருக்கும் இடத்தில் இருந்தது.

நானும் எனது இரு மூத்த சகோதரர்களும் (வில்வராஜா, யோகராஜா) சூசைப்பிள்ளையார் குளத்தில், இப்போது டொக்டர் ராமதாஸ் அவர்களின் வைத்தியசாலை இருக்கும் இடத்திற்குப் பின்னால், டொக்டர் ராமதாஸ் அவர்களின் மாமனார் மதவாச்சி செல்லத்துரை அவர்களினால் வாடகைக்கு விடப்பட்டிருந்த அவர்களது வீட்டில் ஒரு அறையில் தங்கியிருந்து தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றோம்.

எமது மூத்த சகோதரர் திரு.நா.சேனாதிராசா அவர்கள். இப்போது கூட்டுறவுப் பாற்சபை இருக்கும் இடத்தில் இயங்கிய மாவட்ட கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

எங்களுக்கு மூன்று வேளைச் சாப்பாடும் மாலைத் தேநீரும் பகவதி ஹோட்டலில்தான். பகவதி ஹோட்டல் பழைய பஸ் நிலையத்திற்கு நேரெதிரே இருந்தது. இப்போதுள்ள தலைவர் சு.விரசிங்கம் மாளிகைக்கு எதிரே இருந்தது அந்தச் சாப்பாட்டுக்கடை. இப்பொழுது ஈசன்ஸ் பசளைக்கடை (சி.ஏ. இராமஸ்வாமி ஐயா அவர்களின் கடை) இருக்கும் இடத்தில் அப்போது **கண்ணகி ஸ்ரோர்ஸ்** என்ற பெயரில் ஒரு புத்தகக்கடை இருந்தது.

அந்தப் புத்தகக் கடையில் சினிமாப் பாட்டுப் புத்தகங்களோடு திரைப்பட போட்டோ காட்ஸ் (Photo Cards)களும் இருந்தன. அந்தக் கடையைத் தாண்டித்தான் நாங்கள் பகவதி ஹோட்டலிற்குச் செல்வோம். செல்லும் வழியில் கண்ணகி ஸ்ரோசில் சிவாஜி, எம்.ஜீ.ஆர், பத்மினி, சாவித்திரி படங்களைப் பார்த்துச் செல்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது என்னை விட நான்கு ஐந்து வரையில் அதிக வயதுள்ள ஒருவர் அக்கடையில் இருந்தார். எங்களோடு மிகவும் அன்பாகப் பழகுவார். அவர்தான் “குளோப் றேடர்ஸ்” திரு.T.K.இராசலிங்கம் அண்ணர்.

அந்தக் கண்ணகி ஸ்ரோர்ஸ் முதலாளியை அந்தக் கடையிலே கண்டிருக்கிறேன். ஆனால் கதைத்துப் பழகியதில்லை மெல்லிய உருவம், கட்டையான சிவந்த தோற்றம். அவர்தான் இன்றைய இறைபணிச் செம்மல், திருவாசகச் செல்வர் வை.செ. தேவராசா அவர்கள்.

70ம் ஆண்டு வாக்கில் நானும் வளர்ந்து விட்டேன். க.பொ.த சாதாரணதரம் படித்துக் கொண்டிருந்த காலம். பாராளுமன்றத் தேர்தல் மிகுந்த சூடு பிடித்திருந்த காலம். அடலேறு ஆலாலசுந்தரம். அவர்களை அவரது கடையில் கண்டு மகிழ்ந்து உரையாடியது இன்றும் நினைவில் இருக்கிறது.

நாங்கள் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள். தேவராசண்ணையும் தமிழரசுக் கட்சிக்காரர். அப்போது ஆலாலசுந்தரம் அவர்கள் புகழ்பெற்ற பேச்சாளர். சட்டத்தரணி. அவரைச் சந்தித்துப் பேசுவதென்பது அப்போது பெரும் பாக்கியமே. பிற்காலத்தில் தீப்பொறி ஆசிரியர் திரு.ம.க.அந்தனிசில் அவர்களையும் தேவராசண்ணையின் கண்ணகி ஸ்ரோர்ஸ் இல் தான் முதற் தடவையாகச் சந்தித்தேன்.

இருப்பினும் தேவராசண்ணையோடு நான் கதைத்துப் பேசி பழகவில்லை. வாய்ப்புக் கிட்டவில்லை. இராசலிங்கண்ணரோடுதான் எங்கள் பழக்கம். ஒன்றாகச் சாப்பிடுவோம் தான் சாப்பிடுவதை எனக்கும் வாங்கித் தருவார். அவர் எனக்கு மூத்த சகோதரர் மாதிரி என்றே சொல்லலாம்.

1979 வரை எனக்கு அவரோடு நேரடிப் பழக்கம் இல்லை. எனது சகோதரர்கள் தந்தையார், தாயார் யாவருக்கும் அவரோடு நெருக்கமான பழக்கம் இருந்தது. எங்கள் வீட்டில் நாங்கள் 6 ஆண்பிள்ளைகள். யாவருக்கும் **ராசாவில்** தான் பெயர். அதனால் எனது தந்தையார் **தேவராசா** அண்ணனையும் தன் பிள்ளை என்று சொல்வாராம். அந்த அளவுக்கு எங்கள் வீட்டோடு நெருக்கமானவராகி விட்டார் அவர்.

1979 இல் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் துணைப் பொருளாளர் பதவியில் நான் இருந்த காலத்தில் தான் தேவராசண்ணனோடு பழகத் தொடங்கினேன்.

திருவாசக முற்றோதல் செய்ய வேண்டும் என்பதில் பெருநாட்டம் கொண்டிருந்த அவர் கிராமங்கள் தோறும் ஆலயங்களில் திருவாசக முற்றோதலை ஏற்பாடு செய்தார். **பம்பைமடு நரசிங்கர் கோவிலிலும், சாஸ்திரி கூழாங்குளம் சிவன் கோவிலிலும்** அவரோடு சேர்ந்து திருவாசக முற்றோதலில் கலந்து கொண்டேன். அமரர்.நா.பற்குணம் அவர்கள் ஒலிபெருக்கி பொருட்களை சைக்கிலில் கட்டிக்கொண்டு வந்தார்.

அப்பொழுது திருவாசகத்தை சரியாக வாசிக்கவே தெரியாதவர்கள் பலர் ஆர்வத்தால் இணைந்து கொண்டனர். முதன் முதல் திருவாசகப் புத்தகத்தை சிலர் அப்பொழுது தான் தொட்டும் இருப்பார்கள். இராகம் தெரியாது. ஏதோ எழுத்துக்கூட்டி வாசிப்பார்கள். தேவராசண்ணர் மட்டும்தான் இராகத்தோடு வாசிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பைமடுவில் மதிய உணவு எங்கள் வீட்டில், சாஸ்திரி கூழாங்குளத்தில் மதிய உணவு இன்றைய வடமாகாண சுகாதார அமைச்சர் கௌரவ ப.சத்தியலிங்கம் அவர்களின் தந்தையார் அமரர் செ.பத்மநாதன் ஐயா அவர்கள் வீட்டில்.

இப்படி 1990ம் ஆண்டுவரை மந்த கதியில் திருவாசக முற்றோதல் நிகழ்ந்து வந்தது. 1990ல் ஏற்பட்ட போரினால் வவுனியா முற்றாகக் குழம்பியது. நகர் வெறிச்சோடியது. தேவராசண்ணர் இந்தியாவிற்குச் சென்று விட்டார். 1991 பிற்பகுதியில் நான் வவுனியா நகரினுள் வந்து சேர்ந்தேன். கந்தசுவாமி கோயிலில் தொடர் சொற்பொழிவுகள் கந்தசஷ்டி காலத்தில் கந்தபுராணபடனம் என சமயப்பணியைத் தொடர்ந்தேன்.

1992ல் வவுனியாவிற்கு இடமாற்றம் பெற்று வந்த பின் தேவராசண்ணருக்கு வவுனியா நிலையையும் அவர் இங்கிருந்தால் பல சமயப் பணிகளை செய்யலாம் என்பதையும் கடிதம் மூலம் தெரிவித்தேன். அவர் இந்தியாவிலிருந்து திரும்பினார்.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தை மீளச் செயற்படச் செய்ய முயன்றார். இராணுவத்திடமிருந்து சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தை மீட்டெடுத்தோம். செயற்குழுவை தெரிவு செய்தோம். தேவராசண்ணர் தலைவரானார். திரு.நா.சேனாதிராசா அண்ணர் செயலாளரானார். தொடர்ந்து சமயப் பணிகளைத் தீவிரமாகச் செய்யத் தொடங்கினோம்.

திருவாசக முற்றோதல்களோடு பன்னிரு திருமுறை முற்றோதல், கந்தபுராணம் முழுவதுமாகப் படித்து படனம் செய்யப்பட்டது. தை மாதம் 1ம் நாள் திருமுறை முற்றோதல் பூர்த்தி விழாவை குடியிருப்பு பிள்ளையார் கோவிலிலிருந்து கந்தசுவாமி கோவிலுக்கு ஊர்வலம் நடாத்தி, திருமுறை ஏடுகளை எடுத்து வந்து சிறப்பாகச் செய்து நினைவு நூல்களையும் வெளியிட்டோம்.

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், இந்துமாமன்றம், கந்தசுவாமி கோவில்,** மூன்றும் இணைந்து இப்பெருவிழாவை ஆண்டுதோறும் நிகழ்த்தின. இதே வேகத்தில் திருவாசக முற்றோதல்கள் செய்யப்பட்டன. கோவில்களிலேயும், மண்டபங்களிலேயும் மட்டும் ஓதப்பட்டு வந்த திருவாசக முற்றோதல்களைப் பாடசாலைகளுக்கும் விரிவுபடுத்த விரும்பினார் தேவராசண்ணர்.

அதன் விளைவாக இலங்கைத் திருச்சபை தமிழ்க்கலவன் படசாலையில் (C.C.T.M.S.) அதிபர் **திரு.சி.வையாபுரிநாதன்** அவர்களின் ஒத்துழைப்போடு அப்பாடசாலையில் திருவாசக முற்றோதல் நிகழ்த்தப்பட்டது. பல ஆசிரியர்களும் மாணவர்களும் எங்களோடு கலந்து கொண்டு பாடினார்கள். வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் திருவாசக முற்றோதலை நடாத்த விரும்பி அப்போதைய அதிபர் **அமரர்.க.சீனிவாசகம்** அவர்களின் ஒத்துழைப்போடு சிறப்பாக நடாத்தி முடித்தோம்.

இதனைத்தொடர்ந்து கோவில்குளம் இந்துக்கல்லூரியில் அதிபர் **திரு. க.சிவஞானம்** அவர்களின் ஒத்துழைப்போடு ஏற்பாடு செய்யப்பட்ட திருவாசக முற்றோதல் பெரும் சிறப்புக்குரியதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்முற்றோதல் முடிவில் திருவாசகம் பற்றி உரையாற்றியபோது தேவராசா அண்ணனின் திருவாசகப்பணியை போற்றிப் புகழ்ந்ததோடு அவரிடம் ஒரு கோரிக்கையையும் விடுத்தேன். திருவாசக முற்றோதல்களைக் கணக்கெடுக்கும் படியும், பின்னொரு காலத்தில் பெருவிழா எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன். அதுதான் இன்று 1500 முற்றோதல்கள் முடிந்து **அமுத விழா**வாகவும், **தேவ அமுதம்** நூல் வெளியீடாகவும் **பெருவிழா**வாகவும் சிறந்திருக்கிறது.

வவுனியாவில் மட்டுமன்றி செட்டிகுளம் பகுதியிலும், மன்னாரிலும் மற்றும் மாவட்டங்களுக்கும் இப்பணி விஸ்தரிக்கப்பட்டது. 90களில் எம்மோடு **திரு.ச.விஜயகுமார் திரு.சி.இரங்கநாதன், திரு.நா.யோகராசா, திருமதி.புவனநாயகி ஐயம்பிள்ளை, அமரர்.நா.தம்பிராசா, சிவநெறிப்புரவலர்.சி.ஏ.இராமஸ்வாமி ஐயா, திரு.ஆ.தியாகராசா திரு.ஆ.நவரட்ணராசா, திருமதி.புஸ்பா ரீச்சர், திருமதி. வேலுப்பிள்ளை** முதலான சிலரே கலந்து கொண்டனர். இப்பொழுது பெரிய பட்டியலே உண்டு.

திருவாசக முற்றோதல்களின் போது ஓரிரு புத்தகங்களை மட்டுமே வைத்திருந்தோம். இந்தக்குறைபாட்டைப் போக்க தேவராசண்ணர் தனது செலவில் திருவாசகப் புத்தகங்களை அச்சிட்டு அன்பளிப்பாக வழங்கி தட்டுப்பாட்டைப் போக்கினார். இப்படி இரு தடவைகள் தனது சொந்தப்பணத்தில் **திருவாசகப் புத்தகங்களை** அச்சிட்டு விநியோகித்த பெருந்தகை தேவராசண்ணர் என்பது அவரது திருவாசகப் பற்றைப் பறைசாற்றுகிறது.

தேவராசண்ணரோடு திருவாசகப் பணியாற்றிய பலர் இம்மலரில் எழுதியிருக்கிறார்கள். நான் ஆரம்பகாலப் பணியை மட்டும் இங்கு குறிப்பிட்டுள்ளேன். அவரோடு பல இடங்களுக்குச் சென்று பல திருவாசக முற்றோதல்களில் கலந்து கொண்டு உரையாற்றிய நிகழ்வுகள் மிகவும் பசுமையானவை.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வ/இந்துமாமற்றம், கந்தசுவாமி கோவில், கோவிற்குளம் சிவன்கோவில், வெளிவட்டவீதி சிந்தாமணி விநாயகர் ஆலயம், வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயம், ஆகியவை தேவராசண்ணரின் திருவாசக முற்றோதல்களுக்கு பெரும் ஒத்துழைப்பைத் தந்துள்ளன. மேலும் பல ஆலயங்களும் பாடசாலைகளும் உதவியிருக்கின்றன. இன்னும் உதவக் காத்திருக்கின்றன.

தேவராசண்ணரோடு இணைந்து திருவாசக முற்றோதல்களில் பங்குகொள்ளவும், உரையாற்றவும் இன்னும் நீண்டகாலம் அவரை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல சிவபெருமானை வேண்டிப் பணிந்து நிறைவு செய்கிறேன்.

**அகளங்கன்**
தமிழ்அதர்,
90, திருநாவற்குளம்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவாசகச் செல்வர், வாதவூரரின் பாதசேகரன்,
திருமுறைச் செல்வர், இறைபணி வேந்தன்,
ஈழத்துச்சிவதொண்டன், பெரியபுராண மாமனிதர்,
திருவாசக கலாநிதி, கலாபூஷணம்,
இறைபணிச்செம்மல்

# வை.செ.தேவராசா (ச.நீ)

(தலைவர் இந்துமாமன்றம், மணிவாசகர் சபை - வவுனியா)

அவர்களின்

# 80 அமுதவிழா



## அழைப்பிதழ்

**முன்னிலை அதிதி**

கலாகீர்த்தி உடுவை எஸ்.தில்லைநடராஜா அவர்கள்

காலம் :
22-07-2017 சனிக்கிழமை காலை 9.00 மணி.
இடம் :
வவுனியா ஸ்ரீகந்தசுவாமி கோவில் திருமண மண்டபம்.

தலைமை :
கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள்
(தலைவர், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ



## கௌரவ அதிதி

கௌரவ மாவை எஸ்.சேனாதிராசா அவர்கள்
(தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி,
பாராளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்.)

## சிறப்பு அதிதிகள்

1. அந்தணர் சார் அதிதிகள்
   பிரம்மஸ்ரீ இ.பாலச்சந்திரக் குருக்கள் அவர்கள்
   (பிரதமகுரு - ஸ்ரீ கந்தசுவாமி கோவில், வவுனியா)
   சிவஸ்ரீ மு.க.கந்தசாமிக்குருக்கள் அவர்கள்
   (பிரதமகுரு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் , குடியிருப்பு)
   சிவஸ்ரீ இ.கமலேஸ்வரக் குருக்கள் அவர்கள்
   (பிரதமகுரு சிவன்கோவில், கோவில்குளம், வவுனியா)

2. சைவக்குருக்கள் சார் அதிதி
   சிவஸ்ரீ சு.சிவராச குருக்கள் அவர்கள்

3. அரசியல் சார் அதிதிகள்

✦ பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்னி- தேர்தல் தொகுதி
   கௌரவ.செல்வம் அடைக்கலநாதன் அவர்கள்
   கௌரவ.சிவசக்தி ஆனந்தன் அவர்கள்
   கௌரவ.கே.கே.மஸ்தான் அவர்கள்

✦ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்னி- தேர்தல் தொகுதி
   கௌரவ.வை.பாலச்சந்திரன் அவர்கள்
   கௌரவ.இராஜா குகனேஸ்வரன் அவர்கள்
   கௌரவ.வினோநோகராதலிங்கம் அவர்கள்
   கௌரவ.சிவநாதன் கிஷோர் அவர்கள்

✦ வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள்
   கௌரவ.டாக்டர்.ப.சத்தியலிங்கம் அவர்கள்
   (வடக்குமாகாண சுகாதார அமைச்சர்)
   கௌரவ.ஜி.ரி.லிங்கநாதன் அவர்கள்
   கௌரவ.இ.இந்திரராஜா அவர்கள்
   கௌரவ.ம.தியாகராஜா அவர்கள்
   கௌரவ.செ.மயூரன் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ

4. நிர்வாகம் சார் அதிதிகள்

திருமிகு.தி.திரேஸ்குமார் அவர்கள்
(மேலதிக அரச அதிபர் – வவுனியா மாவட்டம்)
திருமிகு.கா.உதயராஜா அவர்கள்
(பிரதேச செயலாளர் – வவுனியா)
சித்தாந்த பண்டிதர்.இ.நித்தியானந்தன் M.A அவர்கள்
(மாவட்ட கலாசார உத்தியோகத்தர் – வவுனியா)
பண்டிதர் வீ.பிரதீபன் அவர்கள்
(பிரதேச கலாசார உத்தியோகத்தர் – வவுனியா)
பிரம்மஸ்ரீ.ச.குகனேஸ்வர சர்மா அவர்கள்
(இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் – வவுனியா பிரதேச செயலகம்)
திருமிகு.சி.சிவகஜன் அவர்கள்
(மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)
திருமிகு.மு.ச.செல்வராஜா அவர்கள்
(கிராம சேவை உத்தியோகத்தர் – வவுனியா நகரம்)
திருமிகு.இ.த.ஶ்ரீகாந்தன் அவர்கள்
(கிராம சேவை உத்தியோகத்தர் – வைரவபுளியங்குளம்)

5. கல்வி சார் அதிதிகள்

திருமிகு. கதிர். சுவர்ணராஜா அவர்கள்
(உப பீடாதிபதி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி)
திருமிகு.ச.பவானந்தன் அவர்கள்
(விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி)
திருமிகு.க.பேனார்ட் அவர்கள்
(ஓய்வுநிலை பீடாதிபதி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி)
திருமிகு.சி.வையாபுரிநாதன் அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர் இ.தி.த.ம.வி)
திருமிகு.சு.பூபாலசிங்கம் அவர்கள்
(விரிவுரையாளர் தொழில்நுட்பக் கல்லூரி)
கலாபூஷணம் க.சிவஞானம் அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர் வவுனியா இந்துக்கல்லூரி)
செல்வி.உமா இராசையா அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர், வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)
திருமதி.நாகேஸ்வரி மாணிக்கவாசகம் அவர்கள்
(ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
திருமதி.த.நிறைமதி அவர்கள்
(ஆசிரிய ஆலோசகர் வவுனியா தெற்கு)
திருமதி.கமலேஸ்வரி பாக்கியநாதன் அவர்கள்
(அதிபர் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருமிகு.தா.அமிர்தலிங்கம் அவர்கள்
(அதிபர், வ.த.ம.ம.வி)
திருமிகு.எஸ்.அமிர்தலிங்கம் அவர்கள்
(அதிபர், விபுலானந்தாக் கல்லூரி)
திருமிகு.த.பூலோகசிங்கம் அவர்கள்
(அதிபர், வவுனியா இந்துக்கல்லூரி)
திருமிகு.எஸ்.வஸ்தியாம்பிள்ளை அவர்கள்
(அதிபர் வ/இலங்கை தி.த.ம.வித்தியாலயம்)

6. கலை இலக்கியம் சார் அதிதிகள்

கலாபூஷணம். அருணா செல்லத்துரை அவர்கள்
(வரலாற்று ஆய்வாளர்)
அருட்கலைவாருதி.ஸ்தபதி.சு.சண்முகவடிவேல் அவர்கள்
திருமிகு.பொ.மாணிக்கவாசகம் அவர்கள்
(சர்வதேச ஊடகவியலாளர்)
கலாபூஷணம்.இ.சிவசோதி அவர்கள்
(தலைவர், முத்தமிழ்ச் சங்கம் வவுனியா)
கலாபூஷணம். க. கனகேஸ்வரன் அவர்கள்
(அதிபர், கானாமிர்த கலாலயம்)
கலாபூஷணம். செல்வி. யோகலட்சுமி சோமசுந்தரம் அவர்கள்
(பேச்சாளர், எழுத்தாளர்)
கலாபூஷணம் க.குமாரசிங்கம் அவர்கள்
(பௌராணிகர்)
நிருத்தியவாணி திருமதி.சூரியயாழினி வீரசிங்கம் அவர்கள்
(அதிபர், நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி)
கலாபூஷணம் திருமதி.வதனி ஸ்ரீதரன் அவர்கள்
(கீர்த்தனாலயா இசைக்கூடம்)

7. சமய நிறுவனம் சார் அதிதிகள்

சிவபூஜா துரந்தரர்.ஆ.நவரத்தினராசா அவர்கள்
(ஸ்தாபனங்களின் ஆதீனகர்த்தா – சிவன் கோவில் அருளகம் வவுனியா)
சாமியம்மா கு.ஜெயராணி அவர்கள்
(தலைவர் இந்து அன்பகம் வேப்பங்குளம்)
கலாபூஷணம்.க.ஐயம்பிள்ளை அவர்கள்
(தலைவர் சேக்கிழார் மன்றம் – வவுனியா)
திருமிகு.வி.முத்துராசா அவர்கள்
(செயலாளர். இந்துமாமன்றம் வவுனியா)
கலாபூஷணம். திருமதி புவனநாயகி ஐயம்பிள்ளை அவர்கள்
(செயலாளர் – மணிவாசகர் சபை)
திருமிகு.ஆ.கோடீஸ்வரன் அவர்கள்
(ஸ்தாபகர், நாவலர் அறநெறிப்பாடசாலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருமிகு.க.அமிர்தலிங்கம் அவர்கள்
(பொருளாளர் இந்துமாமன்றம்)
திருமிகு.பி.பழனிவேல் அவர்கள்
(நிர்வாக சபை உறுப்பினர் இந்துமாமன்றம்)

8. ஆலயம் சார் அதிதிகள்

திருமிகு.க.ந.பாலச் சந்திரன் அவர்கள்
(செயலாளர், தர்மகர்த்தா சபை – வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோயில்)
திருமிகு.இ.கிருபாமூர்த்தி அவர்கள்
(தலைவர், குருமன்காடு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானம்)
திருமிகு.பொ.நல்லையா அவர்கள்
(தலைவர் வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கோவில்)
திருமிகு.டாக்டர். த.முத்துலிங்கம் அவர்கள்
(முன்னாள் தலைவர், குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயம்)
திருமிகு.த.பரதலிங்கம் அவர்கள்
(தலைவர் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம்)
திருமிகு.க.தெய்வேந்திரன் அவர்கள்
(தலைவர் குருமன்காடு ஸ்ரீவிநாயகர் ஆலயம்)
திருமிகு.இ.தர்மபாலன் அவர்கள்
(தலைவர் – ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வேப்பங்குளம்)
திருமிகு.ப.முருகராஜ் அவர்கள்
(தலைவர். இறம்பைக்குளம் ஸ்ரீகருமாரி நாகபூஷணி அம்மன் கோவில்)
திருமிகு.வை.சு.தனபாலசிங்கம் அவர்கள்
(போஷகர். தோணிக்கல் நாகபூஷணி அம்மன் கோவில்)
திருமிகு.இ.விஜேந்திரநாதன் அவர்கள்
(தலைவர், புளியடி விநாயகர் ஆலயம்)
திருமிகு.இ.அமிர்தலிங்கம் அவர்கள்
(தலைவர். கரப்பங்காடு வரசித்தி விநாயகர் ஆலயம்)
திருமிகு.தி.தில்லைநாதன் அவர்கள்
(முன்னாள் தலைவர். ஆதி விநாயகர் ஆலயம்)
திருமிகு.க.சுமந்திரன் அவர்கள்
(தலைவர். ஆதி விநாயகர் ஆலயம்)
திருமிகு.டாக்டர்.ப.சத்தியநாதன் அவர்கள்
(தலைவர், சிவபுரம் சிவன்கோவில் – சாஸ்திரிகூழாங்குளம்)
சிவமணி. ஆறுமுகம் உமாதேவன் அவர்கள்
(தர்மகர்த்தா, கௌரவ பொருளாளர், ஸ்ரீஅகிலாண்டேஸ்வரர் திருக்கோயில்)
திருமிகு.சி.சுப்பிரமணியம் அவர்கள்
(தலைவர், ஸ்ரீமுருகன் ஆலயம் – நெளுக்குளம்)
திருமிகு.க.கந்தசாமி அவர்கள்
(தலைவர், வெளிக்குளம் விநாயகர் ஆலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள



திருமிகு.ந.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள்
(தலைவர், தாண்டிக்குளம் ஸ்ரீமுருகன் ஆலயம்)
திருமிகு.பூ.குமாரகுலசிங்கம் அவர்கள்
(தலைவர், நரசிங்கர் ஆலயம் - பம்பைமடு)
கலாபூஷணம் இரா.சுப்பிரமணியம் அவர்கள்
(தலைவர், கணேசபுரம் முத்துமாரியம்மன் கோவில்)
திருமிகு.டாக்டர். சு.சின்னத்துரை அவர்கள்
(முன்னாள் தலைவர் சாயி சமித்தி வவுனியா)
திருமிகு.கணபதிப்பிள்ளை நவரட்ணம் (ச.நீ) அவர்கள்

9. வர்த்தகம் சார் அதிதிகள்

திருமிகு. ரீ.கே. இராஜலிங்கம் அவர்கள்
(தலைவர் வர்த்தக சங்கம் - வவுனியா)
திருமிகு. கோ. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள்
(செயலாளர் வர்த்தகசங்கம் - வவுனியா)
திருமிகு.மா.கதிர்காமராஜா அவர்கள்
(பொருளாளர் வர்த்தகசங்கம் - வவுனியா)
அல்ஹாஜ் எஸ்.கே.காதர் அவர்கள்
(தொழில் அதிபர்)
திருமிகு.சி.ஞானசம்பந்தன் அவர்கள்
(உரிமையாளர், சில்வா அன் கொம்பனி)
திருமிகு.கா.ந.சண்முகராஜா அவர்கள்
(உரிமையாளர், சிவசக்தி)
திருமிகு.க.செல்வராஜா அவர்கள்
(உரிமையாளர், காஞ்சனா ஜுவலர்ஸ்)
திருமிகு.ச.ஆனந்தராஜா அவர்கள்
(உரிமையாளர், சண்முகம் ஸ்ரோர்ஸ்)
திருமிகு.ஆ.இராஜேந்திரன் அவர்கள்
(உரிமையாளர், வெங்கடேஸ்வரா சுப்பர்மாக்கட்)
திருமிகு.பொ.செல்வநாயகம் அவர்கள்
(உரிமையாளர், வாணி கணினிப் பதிப்பகம்)
ஜனாப். ஹபிபுல்லா அவர்கள்
(உரிமையாளர், வவுனியா ஹாட்வெயர்ஸ்)
திருமிகு.அ.தணிகாசலம் அவர்கள்
(உரிமையாளர், கவிதா ஸ்ரோர்ஸ், வவுனியா)

10. சமூகம்சார் அதிதிகள்

திருமிகு.வீ. ஜெகசோதிநாதன் அவர்கள்
(தலைவர் - பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், வவுனியா)
திருமிகு.அ.ச.பாரதி ஆனந்தம் அவர்கள்
(முன்னாள் முகாமையாளர் வ.ப.நோ.கூ.ச.)
திருமிகு.செ.சந்திரகுமார் அவர்கள்
(தலைவர், தமிழ் விருட்சம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ



## நிகழ்வுகள்

- வரவேற்பு
- மங்கல விளக்கேற்றல்
- தேவார பாராயணம்
- தமிழ் வாழ்த்து

  செல்வி கிருஷ்ரிகா ஞானவேல் அவர்கள்

- வரவேற்புரையும் தலைமை உரையும்

  கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள்
  (தலைவர் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்)

- ஆசியுரைகள்

  சிவஸ்ரீ முத்து ஜெயந்தி நாதக்குருக்கள் அவர்கள்
  (கௌரவ தலைவர் அந்தணர் ஒன்றியம் - வவுனியா மாவட்டம்)
  சிவஸ்ரீ நா. பிரபாகரக் குருக்கள் அவர்கள்
  (கௌரவ செயலாளர் அந்தணர் ஒன்றியம் வவுனியா மாவட்டம்)

- நூல் வெளியீடு :

  "தேவஅமுதம்" (அமுதவிழா மலர்)

- அறிமுக உரை :

  இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன் அவர்கள்
  (மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்)

- சிறப்புரைகள் :

  திருமிகு.மு.சிற்றம்பலம் அவர்கள்
  (ஜனாதிபதி சட்டத்தரணி)
  திருமுருக மாமணி ஆ.தியாகராஜா அவர்கள்
  (தர்மகர்த்தா - நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்)
  பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் M.A,Ph.D அவர்கள்
  (மொழித்துறை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,)
  தமிழருவி.த.சிவகுமாரன். B.A (Hons) அவர்கள்
  (ஸ்தாபகர் தமிழ்ச்சங்கம் - வவுனியா)
  திருமிகு.கு.சிதம்பரநாதன் அவர்கள்
  (பீடாதிபதி தேசிய கல்வியியற் கல்லூரி - வவுனியா)
  மக்கள் சேவை மாமணி.நா.சேனாதிராசா அவர்கள்
  (தலைவர்- வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்)
  புலவர் அ.திருநாவுக்கரசு அவர்கள்
  (செயலாளர் - திருப்பணிச்சபை, திருக்கேதீஸ்வரம் ஆலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ



- கவி வாழ்த்து
  சிவநெறிப்புரவலர், சமூகசஞ்சீவி, தமிழியல் வித்தகர்
  சி.ஏ.இராமஸ்வாமி அவர்கள்
- கௌரவ அதிதி உரை
- முன்னிலை அதிதி உரை
- வாழ்த்துரைகள்
- விழா நாயகரைக் கௌரவித்தல்.
- ஏற்புரை :
  விழா நாயகர்
- நன்றியுரை :
  திரு.தேவராசா. அமலன் அவர்கள்
  (செயலாளர், வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்)
- நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள்
  சித்திரக்குரலோன் சி.நாகராஜா அவர்கள்
  மதுரக் குரலோன்.ஐ.யோகநாதன் அவர்கள்




**அனைவரையும் அன்புடன்**
**அழைக்கின்றோம்.**

- விழாக்குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Printed by: Vaani - Vavuniya, Sri Lanka. - 024 2223658

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org